தனிப் பிரதி ரூ. 5/–
ஆண்டுச் சந்தா ரூ. 60/–

# அன்பு பகிர்வு இயக்கம் செய்திமலர்

மலர் : 9 இதழ் : 10 ஆகஸ்ட் – 2013



## "யோசேப்பு கனிதரும் செடி..." ஆதி. 49 : 22-

ஆசிரியர். பேராயர். வே. தேவதாஸ்



## போதகர். காவ்ஜி கட்டாரா

**மகர்தா,** இராஜஸ்தான்

இயேசு கிறிஸ்துவின் இனிய நாமத்தில் வாழ்த்துக்கள். எனது பெயர் காவ்ஜி கட்டாரா. நான் இராஜஸ்தானில் பான்ஸ்வாடா மாவட்டம், குசல்கட் தாலுகா மகர்தா என்ற கிராமத்தைச் சேர்ந்த பீல் ஆதிவாசி. எங்கள் கிராமத்தின் ஜனங்கள் அனைவரும் கிறிஸ்துவை அறியாமல் பாவத்திலும் அந்தகாரத்திலும் வாழ்ந்து வந்தனர். இந்த சூழ்நிலையிலும் எனது தந்தை டிட்டோ கட்டாரா என்னை படிக்கும் படியாக பள்ளிக்கு அனுப்பினார். ஆனால் நான் பள்ளிக்கு சென்றாலும், சரியாக படிக்காமல், மிகவும் மோசமான பாவங்களைச் செய்து வந்தேன். சில ஆண்டுகளுக்குப் பின்பு எனக்கு திருமணம் நடைபெற்றது. மூன்றரை வருடங்களாக குழந்தை இல்லாமல் குடும்பத்தில் அனைவரும் வேதனையுடன் இருந்துவந்தோம். மருத்துவத்திற்காக ரூ. 15,000/– வரை செலவு செய்தும் பலன் கிடைக்கவில்லை.

இந்த நேரத்தில் சுதேச ஊழியர் சகோ. ரமேஷ் சூர் என்பவர் இயேசுவைப் பற்றிக் கூறி கும்புரா கிராமத்தில் நடைபெற்று வந்த நம்முடைய கூட்டத்திற்கு எங்களை அழைத்துச் சென்றார். அங்கு சுதேச ஊழியர் சகோ. பத்தியாபாய் பாரத்தோடு ஜெபித்தார். தேவன் ஜெபத்தைக் கேட்டு எங்களுக்குக் குழந்தைச் செல்வங்களைக் கொடுத்து ஆசீர்வதித்தார். இந்த அற்புதத்தினைப் பெற்ற நாங்கள் குடும்பமாக கிறிஸ்துதான் உண்மையான தெய்வம் என, பாவங்களையெல்லாம் வட்டுவிட்டு, அவரைப் பற்றிக் கொண்டோம். பின்பு நான் விசுவாசத்தில் வளர்ந்து வந்தேன். தேவன் எங்களது வயல் நிலங்களையும் பல மடங்காக ஆசீர்வதித்தார். பின்பு தேவனுக்கு ஊழியம் செய்ய வேண்டும் என்ற பாரம் எனக்குள்ளாக ஏற்படவே எனது வாழ்க்கையை தேவனுக்காக முற்றிலும் அர்ப்பணித்து ஷாலோம் ஊழியத்தில் இணைந்து எனது சொந்த கிராமத்தில் ஊழியத்தினை ஆரம்பித்தேன்.

பல துன்பங்களைப் பிற இனத்தார் அளித்தபோதும் தேவனுடைய ஊழியத்தை வைராக்கியத்தோடு செய்து வருகின்றோம். தற்போது எங்களது கிராமத்தில் புதிதாக ஒரு அழகிய தேவாலயம் கட்டப்பட்டு, 17.03.2013 அன்று பிரதிஷ்டை செய்யப்பட்டு ஆராதனை நடைபெற்று வருகிறது. தற்போது 50க்கும் அதிகமான குடும்பத்தார் இந்த ஆலயத்தில் ஆராதனை செய்து வருகின்றனர். எனக்காக, குடும்பத்திற்காக, செய்து வரும் ஊழியங்களுக்காக ஜெபியுங்கள்.

இந்த சுதேச ஊழியரை ஜெபித்துத் தாங்குவோர் : **Mrs. Emimah Emerson, Singapore.**

கர்த்தருடைய பெரிதான கிருபையினால் இதுவரையில் 500க்கும் அதிகமான பீல் ஆதிவாசி சுதேச ஊழியர்களை எழுப்பி, பயிற்றுவித்து 600க்கும் அதிகமான ஸ்தல சபைகளை ஊருவாக்கியுள்ளோம். இவ்வருடத்தில் 200 புதிய சுதேச ஊழியர்களை எழுப்ப தேவன் கிருபை தருகிறார். குடும்பமாக, சபையாக, குழுவாக மாதம் ரூ. 2000/– ஜெபித்து கொடுத்துத் தாங்க முன் வாருங்கள். பாரத தேசம் எங்கும் வீட்டிற்கு ஒரு நற்செய்தி பணியாளரை அனுப்புவோம். தேசம் தேவனை அறியட்டும்! அல்லேலூயா!

## உங்கள் சகோதரனிடமிருந்து....

*கிறிஸ்துவுக்குள் மிகவும் அன்பானவர்களே!*



ஆண்டவரும் இரட்சகருமான இயேசுகிறிஸ்துவின் நாமத்தில் வாழ்த்துக்கள். உங்கள் அனைவரின் ஜெபங்களினாலும், உற்சாகமான காணிக்கைகள் மூலமாககவும் ஷாலோம் ஊழியங்கள் தேவ நாம மகிமைப்பட பீல்மக்கள் மத்தியில் சிறப்பாக நடைபெற்று வருகிறது.

**"... உன் தேசம் இனிப் பாழான தேசம் என்னப்படாமலும், நீ எப்சிபா என்றும், உன் தேசம் பியூலா என்றும் சொல்லப்படும்; கர்த்தர் உன் மேல் பிரியமாயிருக்கிறார்; உன் தேசம் வாழ்க்கைப்படும்".** ஏசாயா 62:4

நம் பாரத தேசத்தில் கர்த்தர் நம்மை அவருக்குச் சாட்சியுள்ள ஜனங்களாகவும், தேசத்திற்கு ஆசீர்வாதமுள்ளவர்களாகவும் நம்மை உருவாக்கி வைத்துள்ளார். நம் தேசத்தின் ஆவிக்குரிய ஆசீர்வாதங்களுக்காக, தேசத்தின் பொருளாதார நலனுக்காக, ஆளுகை செய்பவர்களுக்காக பாரத தேசம் சத்துருவின் பொல்லாத தீய திட்டங்களுக்கு நீங்கலாகி பாதுகாக்கப்படவும் திருச்சபைகள், ஊழியங்கள், மிஷனெரிப் பணிகள் ஆசீர்வதிக்கப்படவும் ஜெபியுங்கள்.

கடந்த ஜுலை மாதம் முழுவதும் தேவன் தாமே ஊழியங்களை அபரிவிதமாக ஆசீர்வதித்தார். ஜுலை 1ம் தேதி அன்று அலுவலக ஊழியர்கள், மூத்த ஊழியக்காரிகள் கூடுகையில் ஷாலோம் ஊழியப்பாதையில் 22 வருடங்கள் நடத்தி வந்த தேவனை துதித்தோம். 15.07.2013 அன்று தாகோத்தில் 3 மாநிலத்தில் உள்ள 100 மூத்த ஊழியர்கள் குடும்பங்களாக இணைந்து 25 வருட நிறைவுக்குள் (2016 ஜுலை) 1000 சபைகள், 1000 ஊழியர்கள் என்ற தரிசனத்துடன் 3000 கிராமங்களை சந்திக்க அனைவரும் தங்களை அர்பணித்தார்கள். மட்டுமன்றி ஜுலை 16,17,20 ஆகிய தேதிகளில் மத்தியப்பிரதேசம், இராஜஸ்தான், குஜராத் மாநிலங்களிலும் சுதேச ஊழியர்கள் கூடுகைகள் நடைபெற்றது.

தேவகிருபையால் ஷாலோம் சேரிட்டி மிஷன் மூலமாக **Sharon Memorial Mission Hospital** 15.07.2013 திங்கட்கிழமை அன்று குஜராத் தாகோத்தில் நமது ஷாலோம் வளாகத்தில் ஜெபித்து ஆரம்பிக்கப்பட்டது. இந்த உன்னதமான சேவைக்காக உங்கள் ஜெபங்களும், ஆதரவுகளும் மிக அதிகம் தேவை. ஜுலை மாதத்தில் நம்முடைய ஷாலோம் ஊழியத்தின் Board Member **C.S. கிறிஸ்டோபர்** அவர்களும், அவரது துணைவியார் **Dr. பிரேமா கிறிஸ்டோபர்** அவர்களும் 4 நாட்கள் பணித்தளத்தை பார்வையிட்டு அநேக ஊழியங்களை நிறைவேற்றினார்கள்.

அதுமட்டுமல்லாமல் **Dr. ஏபல்** மற்றும் அவர்கள் அன்பு துணைவியார் **Dr. ஜாலி ஏபல்** அவர்களும் குடும்பமாக வந்து 1 வாரம் தங்கியிருந்து மருத்துவ பணிகளின் வளர்ச்சிக்காகவும், அநேக புதிய திட்டங்களை வகுத்து ஆலோசனை வழங்கினார்கள். அவர்களுக்காக தேவனைத் துதிக்கிறோம். அதுபோல் பெங்களூரிலிருந்து **Dr. இன்பக்குமார்** அவர்களின் சகோதரியான **சாந்தா சாலொமோன்** மற்றும் அவர்கள் கணவர் **சகோ. ரெஜினால்ட் சாலொமோன்** அவர்களும் பணித்தளத்தைப் பார்வையிட்டு மருத்துவமனை திறப்பு விழாவில் பங்கெடுத்தது மிகுந்த மகிழ்ச்சியான காரியமாகும். தேவகிருபையால் Seva Bharat ஸ்தாபனத்தின் மூலமாக 3 மாநிலங்களில் ICT 1 வருட வேதாகம பயிற்சி 30 ஊழியர்களுக்கு ஜுலை மாதத்தில் ஆரம்பித்து வைக்கப்பட்டது.

தொடர்ந்து ஆகஸ்ட் மாத ஊழியங்களுக்காக ஜெபியுங்கள். உங்கள் யாவரின் ஜெபங்களினாலும், நிதி உதவியினாலும் ஆதிவாசி மாணவர்கள் நன்றாக கல்வி கற்று வருகிறார்கள். இன்னும் பல மாணவர்களுக்கு நிதிஉதவி வழங்க வேண்டியதுள்ளது. இதற்காக ரூ.10,000 வருடத்திற்கு ஒருமுறை கொடுத்து 3 அல்லது 4 வருடங்கள் ஆதரவு தரும் ஆதரவாளர்களை கர்த்தர் எழுப்பி தர ஜெபியுங்கள்.

தேவன் இவ்வருடம் நல்ல மழையைக் கட்டளையிட்டு உள்ளார். விசுவாசிகள் சந்தோஷத்துடன் தங்கள் விளைநிலங்களில் விதைத்து உள்ளார்கள். ஈசாக்கின் தேவன் 100 மடங்கு விளைச்சலை தந்து ஆசீர்வதிக்க ஜெபியுங்கள். சுமார் 3 மாநிலங்களில் 25 இடங்களில் ஆலய கட்டுமானப் பணிகள் நடைபெற ஜெபியுங்கள்.

ஆதிவாசி மாணவர் கல்விநிதி, **Sharon Memorial Mission Hospital** க்கான மருத்துவப் பணிக்களுக்கான நிதி உதவி மற்றும் ஊழியர்களை நடத்திச் செல்ல தேவையான நிதி உதவி **ரூ. 5 இலட்சங்கள்** மாதம் கிடைக்கப் பெற குறிப்பாக மாதம் **ரூ. 500** ஜெபித்து கொடுத்து உதவும் ஆதரவாளர்கள் 1000 பேர்கள் எழும்ப ஜெபியுங்கள். ஒவ்வொரு மாவட்டத்திற்கும் ஷாலோம் பிரதிநிதிகளை தேவன் எழும்பி தர ஜெபியுங்கள். நம் ஊழியத்தை நேசித்து, ஜெபித்து தாங்கும் நீங்கள் யாவரும் குறைந்தது 5 பேர்களுக்கு நம் ஊழியங்களை அறிமுகப்படுத்தி புதிய ஜெபஆலயங்கள் எழுப்ப அன்புடன் வேண்டுகிறேன்.

தேவகிருபையால் அன்பு மகள் **ஜாய் ஷெக்கினா** ரஷ்யாவிலிருந்து மருத்துவபடிப்பின் 3ம் ஆண்டை வெற்றியாக முடித்து குஜராத் வந்திருக்கிறார். மருத்துவக் காரியங்களை காணவும், **Dr. இன்பக்குமார்** அவர்களின் ஆலோசனைகளைப் பெற்று முன்னேறி வருகிறார். மறுபடியும் ஆகஸ்ட் 28ம் தேதி ரஷ்யாவிற்கு 4ம் வருட படிப்பைத் தொடர புறப்பட இருக்கும் அவளுக்காக ஜெபிக்க அன்புடன் கேட்கிறேன்.

தொடர்ந்து ஷாலோம் ஊழியத்தில் உறுதுணையாக எங்கள் குடும்பத்துடன் பீல் மக்கள் தரிசனப்பணியில் இணைந்து செயல்படும் பணித்தள அலுவலக ஊழியர்கள், முன்னேற்ற திட்டப்பணிகளில் (கல்வி, மருத்துவம்) செயல்படும் ஊழியர்கள், தூத்துக்குடி தலைமை அலுவலக ஊழியர்கள், ஷாலோம் முன்னேற்றப்பணி ஊழியர்கள் யாவரையும் தேவன் ஆசீர்வதிக்கவும், தேவனுக்காக அவர்கள் உத்தமமாக ஊழியம் செய்யவும் அனைவரும் பாரத்துடன் ஜெபியுங்கள்.

பீல்மக்கள் இரட்சிப்பின் பணியில் ஷாலோம் ஊழியத்துடன் இணைந்து ஜெபித்து தாங்கும் உங்கள் அனைவரையும் தேவன் தாமே ஆசீர்வதிப்பாராக!

**"... உன் சந்ததிக்குள் பூமியிலுள்ள சகல ஜாதிகளும் ஆசீர்வதிக்கப்படும்"** ஆதியாகமம் 26 : 5ன் படி ஆவியானவரின் ஆசீர்வாதம் இயேசுவுக்குள் நம் அனைவரின் மீதும் தங்கியிருப்பதாக! ஆமென்.

*தேவ அறுவடைப் பணியில் உங்கள் அன்பு சகோதரன்,*



(பேராயர் **V.** தேவதாஸ்)

என்னுடன் தொடர்பு கொள்ள

**09377445468** (குஜராத்) **9443965468** (தமிழ்நாடு)



# யோசேப்பு கனிதரும் செடி

சிறப்புச் செய்தி : **Bishop. V. தேவதாஸ்**



தேவனாகிய கர்த்தர் ஆபிரகாமை தெரிந்து கொண்டு ஆசீர்வதிக்கும்போது அவருடைய குடும்பத்தை மட்டும் ஆசீர்வதிக்க சித்தம் கொள்ளவில்லை. **"... உன் சந்ததிக்குள் பூமியிலுள்ள சகல ஜாதிகளும் ஆசீர்வதிக்கப்படும்"** (ஆதி. 26:5) என்று தேசங்களுக்கு ஆசீர்வாதமாக தேவன் தெரிந்து கொண்டார். யோசேப்பின் தகப்பன் யாக்கோபு, அவனை ஆசீர்வதிக்கும்போது சொன்ன ஆசீர்வாத வசனங்களைக் கவனித்துப் பாருங்கள்.

**"யோசேப்பு கனிதரும் செடி; அவன் நீர் ஊற்றண்டையிலுள்ள கனிதரும் செடி; அதின் கொடிகள் சுவரின்மேல் படரும். வீல் வீரர் அவனை மனமடிவாக்கி, அவன்மேல் எய்து அவனைப் பகைத்தார்கள். ஆனாலும், அவனுடைய வில் உறுதியாய் நின்றது; அவன் புயங்கள் யாக்கோபுடைய வல்லவரின் கரங்களால் பலத்தன. இதினால் அவன் மேய்ப்பனும், இஸ்ரவேலின் கன்மலையும் ஆனான். உன் தகப்பனுடைய தேவனாலே அப்படியாயிற்று, அவர் உனக்குத் துணையாயிருப்பார்; சர்வவல்லவராலே அப்படியாயிற்று;"**

**"அவர் உயர வானத்திலிருந்து உண்டாகும் ஆசீர்வாதங்களினாலும், கீழே ஆழத்தில் உண்டாகும் ஆசீர்வாதங்களினாலும், ஸ்தனங்களுக்கும் கர்ப்பங்களுக்கும் உரிய ஆசீர்வாதங்களினாலும் உன்னை ஆசீர்வதிப்பார். உன் தகப்பனுடைய ஆசீர்வாதங்கள் என் பிதாக்களுடைய ஆசீர்வாதங்களுக்கு மேற்பட்டதாயிருந்து, நித்திய பர்வதங்களின் முடிவுமட்டும் எட்டுகின்றன. அவைகள் யோசேப்புடைய சிரசின் மேலும், தன் சகோதரரில் விசேஷித்தவனுடைய உச்சந்தலையின்மேலும் வருவதாக".** ஆதி.49:22–26

யோசேப்பை குறித்த ஆசீர்வாதத்தில் முதல்படியாக அவனை கனிதரும் செடியாக கூறப்பட்டது. அவன் தன் குடும்பத்தாருக்கும், தன்னை சுற்றி இருந்தவர்களுக்கும் இறுதியில் தேசத்திற்கும் கனிதரும் செடியாக வாழ்ந்தான். இந்தச் செய்தியின் மூலம் அவனுடைய வாழ்க்கையை குறித்து சில நற்காரியங்களை தியானிப்போம்

**யோசேப்பு தேவனிடத்திலிருந்து சொப்பனம் பெற்றவனாக இருந்தான்:**

முதலாவதாக இளம் வயதிலே தன் தகப்பனாகிய யாக்கோபுக்கு கீழ்படிந்து, சர்வ வல்லமையுள்ள தேவனை அறிந்து, விசுவாசித்து நடந்தான். தன் சகோதரர்கள் நடந்து வந்த தவறான பாதையில் நடக்க தன்னை ஒப்புக் கொடுக்காமல் ஆண்டவரை நேசித்து, தேவனுடன் வாழ்ந்தபடியால் தேவன் அவனுக்கு இரண்டு சொப்பனங்களை கொடுத்தார். வாழ்க்கையில் தேவன் தன்னை எப்படி ஆசீர்வதித்தார் என்பதை அறிந்து கொண்டான். ஆகவே தன் வாழ்க்கையில் துயரமான சூழ்நிலைகளையும் கடந்து வந்தாலும் சோர்ந்து போகாமலும் தேவனிடத்தில் முறுமுறுக்காமலும், நீடிய பொறுமையுடன், பாடுகள், நிந்தனைகள் மத்தியிலும் தேவனை விசுவாசித்து, அவரது அழைப்பையும், சித்தத்தையும் உறுதியாகப் பற்றிக் கொண்டான்.

என் 19ம் வயதில் தேவன் என்னை தெரிந்து கொண்டு பேர் சொல்லி அழைத்தார். பாரத தேசத்தில் ஒரு ஜாதி மக்களுக்கு உன்னை ஆசீர்வாதமாக வைப்பேன் என திருவுளம் பற்றினார். அதேபோல், 1985ம் ஆண்டு திருமணமானவுடன் அதே வாரத்தில் தேவன் என் மனைவி வஹிதாவிடம் பீல் மக்களை தரிசனமாக தந்து இந்த ஜாதி மக்களை தான் உங்களுக்கு கொடுப்பேன் என்று பேசினார். இந்த அழைப்பும் தரிசனமும்தான் எங்களை 28 ஆண்டுகள் (பீல்மக்கள் மத்தியில்) ஊழியப்பாதையில் எந்த கஷ்டங்கள், போராட்டங்கள், சோதனைகள் வந்தாலும் கூட எங்களை பலப்படுத்தி நடத்தி வருகிறது. ஏனெனில் அழைத்தவர் உண்மையுள்ளவர் ஆதலால் அவர் நடத்துவார் என்ற விசுவாசத்துடன் தேவன் தந்த தரிசனத்தை நிறைவேற்றி வருகிறோம்.

எனக்கன்பானவர்களே, தேவனிடத்தில் ஜெபித்து உங்கள் அழைப்பை உறுதிப்படுத்துங்கள். அவர் தந்த தரிசனத்தில் நிலையாக நிலைத்திருங்கள். தேவன் தாயின் கர்ப்பத்தில் என்னை தெரிந்து கொண்டவர் அவர் சித்தமின்றி என் வாழ்வில் எதுவும் நடைபெறாது என்று விசுவாசத்துடன் தடைகளை தாண்டி முன்னேறுங்கள்.

## கர்த்தர் யோசேப்போடே கூட இருந்தார்: (ஆதி.39:2,3,21,23)

இரண்டவதாக, சேனைகளின் கர்த்தரின் நாமத்தில் ஒன்று **"யேகோவா ஷம்மா"** அதாவது கர்த்தர் **"நம்மோடு இருக்கிறார்"** என்பது பொருள். தாவீதும் தேவனை பாடும்போது சேனைகளின் கர்த்தர் நம்மோடிருக்கிறார் (சங்கீதம் 46:11) என்று மகிழ்ந்து களிகூருகிறார். ஒரு தேவபிள்ளையுடன் கர்த்தர் இருப்பாரானால் மிகுந்த ஆசீர்வாதமாக இருக்கும்.

ஈசாக்குடன் கர்த்தர் இருந்தபடியால் அவன் நூறுமடங்கு ஆசீர்வாதத்தைப் பெற்றான். பெலிஸ்தரும், அபிமேலுக்கும் அவனிடத்தில் வந்து கர்த்தர் உன்னோடு கூட இருக்கிறார் என சாட்சி கொடுத்தார்கள். தாவீதோடே கூட சேனைகளின் கர்த்தர் இருந்தபடியால் தேவன் அவனை விருத்தியடையச் செய்து, பெரியவனாக்கி அவனுக்கு வெற்றியைக் கட்டளையிட்டார். அதுபோல தேவன் யாரோடெல்லாம் இருந்தாரோ அவர்களுக்கெல்லாம், பெரிய காரியங்களைச் செய்து ஆசீர்வாதங்களையும் கொடுத்திருக்கிறார். யோசேப்பு தன் வாழ்க்கையில் சகோதரர்களால் வெறுக்கப்பட்டு, குழியில் தள்ளப்பட்டு, அடிமையாக விற்கப்படடபோதும், கர்த்தர் அவனுடன் இருந்தார். செய்யாத தவறை செய்தான் என்று சிறைச்சாலையில் தள்ளப்பட்ட போதும்கூட தேவன் இருந்து அவனை நடத்தினார். வாழ்க்கையில் எப்படிப்பட்ட சூழ்நிலைகளை கடந்து வந்தாலும் தேவன் நம்மோடு இருப்பதுதான் ஆசீர்வாதம்.

ஷாலோம் 1991ம் ஆண்டு ஜுலை மாதம் ஆரம்பிக்கப்பட்டபோது ஊழியப்பாதை மிக அற்பமாக இருந்தது. பலவிதமான சூழ்நிலைகளை கடந்து வந்தபோது, குறிப்பாக எங்கள் அன்பு மகள் ஷாரோன் மரித்தபோது மிகவும் வேதனையுடன் ஆறுதலற்றவர்களாக இருந்தோம். அப்படிப்பட்ட நிலையில் ஒருநாள் ஜெபவேளையில் இயேசு கிறிஸ்து எங்களுக்கு தரிசனமாகி எங்களுடன் பேசி எங்களை திடப்படுத்தினார். **"இதோ உலகத்தின் முடிவு பரியந்தம் சகல நாட்களிலும் உங்களுடனே கூட இருக்கிறேன்"** என்ற இயேசு தாமே எங்களுக்கு தரிசனமாகி, 22 வருடங்கள் கூட இருந்து ஊழியங்களை நடத்தினபடியால் இன்று ஷாலோம் திருமண்டலமாக உருவாகியுள்ளது.

தேவஜனமே, கர்த்தர் நம்மோடிருக்கிறார். உங்களுக்கு விரோதமான சகல அந்தகாரத்தின் கிரியைகளையும், பொறாமை கண்களையும், சத்துருவின் போராட்டங்களையும் தேவன் மாற்றி உங்களுடன் இருந்து வெற்றியை தந்து யோசேப்பை சிறையிருப்பிலிருந்து சிங்காசனத்திற்கு உயர்த்திய தேவன் உங்களையும் உயர்த்தி, ஆசீர்வாதத்தின் தடைகளையும் நீக்கிப் போடுவார்.

## யோசேப்பு தன் வாழ்க்கையில் பிறரை மன்னிக்கிறவனாக இருந்தான்

மூன்றவதாக ஆதியாகமம் 50ம் ஆதிகாரத்தை வாசித்துப் பாருங்கள். யோசேப்புக்கு விரோதமாக சகோதரர்கள் எவ்வளவு தீங்கு செய்தார்கள். உயிரோடு கொல்ல நினைத்தார்கள், அடிமையாக விற்றுப் போட்டு தகப்பனிடத்தில் பொய் சொன்னார்கள். ஆனால் தேவன் யோசேப்புக்கு அவர் சித்தத்தின்படி, கொடுத்த சொப்பனத்தின்படியே தேசத்தில் உயர்த்தியபோது சகோதரர்கள் மிகவும் பயந்து, அவனுக்கு முன்பாக தாழ விழுந்து அடிமைகள் என்று கூறினார்கள்.

ஆனால் யோசேப்பு அவர்களை பார்த்து பயப்படாதிருங்கள் என்று கூறி, நான் தேவனா? என்று தன்னை தாழ்த்தினான். தீமைக்குத் தீமை செய்யாமல் நன்மை செய்தான், அவர்களுக்கு ஆறுதல் சொல்லி முழு குடும்பத்தையும் பராமரிப்பேன் என்று கூறினான், மரண தறுவாயில் தேவனுடைய வாக்குத்தத்தம் நிறைவேறும் என்று அவர்களை உறுதிப்படுத்தினான்.

எனக்கன்பானவர்களே, யோசேப்பு கனிதரும் செடியல்லவா? நம் வாழ்க்கையில் நமக்கு விரோதமாக செயல்பட்ட நம் குடும்பத்தார், உறவினர், நண்பர், உடன் ஊழியர் யாராக இருந்தாலும் நாம் மன்னிக்கிறவர்களாக காணப்படுகிறோமா? யோசேப்பு தன் சகோதரர்கள் இளைத்த துன்பங்களை, துரோகங்களை நினைத்துப் பார்க்காமல், மன்னித்து மறந்து தெய்வீக அன்பை வெளிப்படுத்தினான். இந்த அன்பு இயேசுவின் அன்பு. நம் உள்ளத்தில் மன்னிக்க முடியாத வைராக்கியம் இருக்குமானால் இயேசுவே உம்மைபோல் கனிதரும் செடியாக மாற்றும், பரிசுத்த ஆவியால் நிரப்பி, வல்லமை வரங்கள், தெய்வீக அன்பு, மன்னிக்கிற சுபாவம் போன்றவற்றைத் தாரும் என்று கேட்போம். கர்த்தருடைய பந்தியில் நாம் சேரும் போது அப்பத்தையும், இரத்தத்தையும் நாம் ஏற்றுக் கொள்ளும்போது தெய்வீக அன்பிற்காக அவரை வேண்டிக்கொள்வோம். தேவன் நம்மை நம் குடும்பத்திற்கு மட்டுமல்ல, தேசத்திற்கே ஆசீர்வாதமாக மாற்றுவார்.

## யோசேப்பு தேவ ஆவியைப் பெற்றிருந்தான்

கடைசியாக, தேவ ஆவியால் நிரப்பப்பட்டிருந்தபடியால் அவன் அடிமையாக கொண்டு செல்லப்பட்ட இடத்தில் அவனுடைய வேலைகளில் ஞானமாய் செயல்பட்டான். போத்திபார் வீடும் ஆசீர்வதிக்கப்பட்டது. அதுபோல சிறைச்சாலையில் இருந்தபோதும் அவனுடைய செயல்களைப் பார்த்து சிறைச்சாலைத் தலைவன் யோசேப்பின் கைகளில் பொறுப்புகளை ஒப்புவித்தான். தேவஆவி அவனுக்குள் இருந்தபடியால் சிறைசாலையில் இருந்த சுயம்பாகி தலைவனும், பானபாத்திரக்காரனும் பார்த்த சொப்பனத்திற்கு அர்த்தங்களைக் கூற முடிந்தது. பார்வோன் கண்ட சொப்பனத்தில் மனங்கலங்கி, மந்திரவாதிகளும், சாஸ்திரிகளும் சொல்லமுடியாத விளங்களை தேவ ஆவியின் வரங்களினால் கூறமுடிந்தது. அதே ஆவியால் 7 வருட பஞ்ச காலத்தை சமாளித்து தேசத்தை வழிநடத்த முடிந்தது. தேவ ஆவியானவரின் அந்த அபிஷேகம் சிறைச்சாலையிலிருந்து சிங்காசனத்திற்கு உயர்த்தியது.

என் அன்பு சகோதர சகோதரிகளே, பாவமன்னிப்பைப் பெற்று இயேசுவின் இரத்தத்தால் கழுவப்பட்டு ஞானஸ்நானம் எடுத்து தேவஜனமாக அழைக்கப்பட்டவர்களுக்கு, தேவன் விசேஷித்த ஆசீர்வாதமாகிய பரிசுத்த ஆவியானவரின் அபிஷேகத்தைத் தருகிறார். பரிசுத்த ஆவியின் அபிஷேகத்தை வாஞ்சித்து பெற்றுக் கொள்ளும்போது நுகத்தடிகள் முறியும், சத்துருகளுக்கு முன்பாக நம் தலை உயர்த்தப்படும். மாம்சமான யாவர் மீதும் என் ஆவியை ஊற்றுவேன் என்று வாக்குரைத்த தேவன் அபரிவிதமாக ஷாலோம் சபைகளிலுள்ள பீல் மக்கள் மீது ஊற்றப்பட்டு வருகிறார். பரிசுத்த ஆவியானவரின் அபிஷேகத்தை பெறும்போது நாம் பெலனடைந்து சாட்சிகளாக விளங்குகிறோம். நமக்குள் இருக்கும் ஆவியானவரின் அபிஷேகத்தின் மூலமாக தேவனுடன் உறவாடும் பாக்கியத்தை பெறுகிறோம். தேவனுடைய ராஜ்ஜியத்திற்கு ஆத்துமாக்களை ஆதாயப்படுத்த இன்றும் இயேசு கிறிஸ்து இருக்கிறார் என்பதை காட்டுவதற்கு அபிஷேகத்தின் வல்லமை ஒவ்வொரு விசுவாசிகளுக்கும் தேவை.

இன்று பீல் ஆதிவாசி விசுவாசிகளில் பெரும்பாலானோர் எழுதப் படிக்க தெரியாதவர்கள். அவர்கள் பேசும் பாஷையான பீல், பிலோடி, வாகுடி மொழிகளுக்கு எழுத்துவடிவம் கிடையாது, இவர்கள் மொழிகளில் வேதபுத்தகம் கிடையாது. ஆனால் இயேசு கிறிஸ்துவை சொந்த இரட்சகராக ஏற்றுக்கொண்ட பின்பு பரிசுத்த ஆவியின் அபிஷேகத்தை வாஞ்சையோடு காத்திருந்து பெற்றுக் கொள்ளுகிறார்கள். அதன் மூலமாக கிராமங்கள்தோறும் பாவம், சாபம், நோய்களிலிருந்து தம் சொந்த ஜனங்களை இயேசுவின் நாமத்தில் விடுவித்து, ஆத்தும ஆதாயம் செய்து வருகிறார்கள். இப்பொழுது அவர்கள் சந்ததி ஆசீர்வதிக்கப்பட்டு, அவர்களுடைய பிள்ளைகள் நன்றாக படித்து முன்னேறி வருகிறார்கள். அவர்களை குடும்பத்திற்கு மட்டுமல்ல, முழு பீல் மக்களுக்கும், தேசத்திற்கும் ஆசீர்வாதமாக மாற்றி வருகிறார்.

**"...உன் சந்ததியின்மேல் என் ஆவியையும், உன் சந்தானத்தின் மேல் என் ஆசீர்வாதத்தையும் உற்றுவேன்"** என்ற வசனத்தை விசுவாசித்து நாம் ஜெபிக்கும்போது, தேவன் யோசேப்பைப்போல நம் சந்ததியையும் அபிஷேகித்து நம் குடும்பத்திற்கும், சபைக்கும், தேசத்திற்கும் ஆசீர்வாதமாக நம்மை உயர்த்தி, யோசேப்பைப் போல கனிதரும் செடியாகவும், தேவனுக்கு சாட்சியாகவும் வாழவைப்பார்.

## `ôúXôm 24 U¦ úSW Ne¡-j ùRôPo ù_Tm

நாள் : **17.08.2013 (சனிக்கிழமை)**



நேரம் : **அதிகாலை 12.00 மணி முதல் மறுநாள் நள்ளிரவு 11.59 மணி வரை (24 மணிநேரம்)**

*நீங்களும் பீல் மக்களுக்காகவும், ஷாலோம் ஊழியத்திற்காகவும் ஏதாவது 1 மணிநேரம் ஜெபிக்க விரும்பினால் எங்களுடன் தொடர்பு கொள்ளுங்கள். நாங்கள் உங்களுக்கு ஜெபக்குறிப்புகளை அனுப்புகிறோம்.*




# சில புள்ளி விபரங்களும் ஜெபக்குறிப்புகளும்..

**"தேசமே, பயப்படாதே, மகிழ்ந்து களிகூறு; கர்த்தர் பெரிய காரியங்களைச் செய்வார்".** யோவேல் 2:21

| | | | |
|---|---|---|---|
| மக்கள் தொகை | : சுமார் 122 கோடி | மாநிலங்கள் | : 28 |
| யூனியன் பிரதேசங்கள் | : 7 | மாவட்டங்கள் | : 657 |
| கிராமங்கள் | : 6 இலட்சத்திற்கு மேல் | மக்கள் இனங்கள் | : 4635 |
| இந்துக்கள் | : 82% | முகமதியர்கள் | : 12% |
| கிறிஸ்தவர்கள் | : 2.3% | பிற மதத்தவர் | : 4% |
| பேசப்படும் மொழிகள் | : 1652 | பாராளுமன்ற இடங்கள் | : 552 |
| ராஜ்யசபா இடங்கள் | : 250 | சட்டசபை இடங்கள் | : 4175 |
| கல்வியறிவு விகிதம் | : 74.04% | | |

(ஆண்கள் : 82.14%, பெண்கள் : 65.46%)

வளர்ந்து வரும் வல்லரசு நாடுகளில் இந்தியாவும் ஒன்று. உலகத்தின் மிகப்பெரும் ஜனநாயக நாடாக இந்தியா விளங்குகிறது. மக்களுக்கு கல்வி, மருத்துவம், சாலை போன்ற அடிப்படை வசதிகளைச் செய்து கொடுக்கும் முயற்சியில் அரசாங்கம் இருந்தாலும், அநேக சமுதாயத் தீமைகளை அரசோ அல்லது அரசியல்வாதிகளோ கண்டு கொள்ளவில்லை. நமது தேசத்திற்காக ஜெபிக்க தேவன் நம்மை அழைக்கிறார்.

**இந்தியா – சில புள்ளி விவரங்கள்**

1. உலகிலுள்ள ஏழை மக்களில் சுமார் 50 சதவீதம் ஏழைகள் இந்தியாவில் உள்ளனர்.
2. பிராமணர்கள், ஷத்திரியர்கள் மற்றும் வைஷ்ணவர்கள் ஆகியோர் சாப்ட்வேர் நிறுவனங்களிலும், தொழில்நுட்ப நிறுவனங்கள் மற்றும் உணவகங்களின் நிர்வாகப் பொறுப்பிலும் பணி செய்கின்றனர்.
3. உலகிலுள்ள 10 பணக்காரர்களில் 4 பேர் இந்து இனத்தைச் சேர்ந்தவர்கள்.
4. இந்தியாவில் 40 சதவீதம் குடும்பங்கள் ஒரு அறை உள்ள வீட்டில் வசிக்கின்றனர்.
5. உலகில் 8 நொடிக்கு ஒரு நபர் எய்ட்ஸ் நோயால் பாதிக்கப்படுகின்றனர். நாள் ஒன்றுக்கு 11,000 பேர் இந்த நோயினால் பாதிக்கப்படுகின்றனர். 8000 பேர் இந்நோயால் இறக்கின்றனர்.
6. இந்தியாவில் குடிசையில் வசிப்பவர்கள் சுமார் 20 கோடி மக்கள்.
7. இந்தியாவில் 400க்கும் அதிகான பிரிவுகளிலுள்ள சுமார் 10 கோடிக்கும் அதிகமான ஆதிவாசிகள் உள்ளனர்.

**ஜெபக்குறிப்புகள்**

1. மக்களவை மற்றும் மாநிலங்களவையின் தலைவர்கள், உறுப்பினர்கள், எதிர்கட்சித் தலைவர்களுக்கு வேண்டிய தேவ ஞானம், ஒத்தாசை, வழிநடத்துதல் கிடைக்க ஜெபிப்போம்.
2. தங்களை அதிகாரத்தில் வைத்திருப்பவர் தேவனே என்ற எண்ணம் அவர்கள் மனதில் நிலைத்திருக்கவும், மக்களுக்கு செய்ய வேண்டிய கடமைகளை நீதிநேர்மையுடன் நிறைவேற்றவும் ஜெபிப்போம்.
3. இவர்களின் இரட்சிப்பிற்காக, பாதுகாப்பிற்காக, ஜெபிப்போம்.
4. பாராளுமன்றத்தில் வருடந்தோறும் பிப்ரவரி முதல் மே வரையில் 20 முதல் 35 நாட்கள் நடைபெறும் பட்ஜெட் கூட்டத் தொடருக்காகவும், ஜீலை மற்றும் ஆகஸ்ட் மாதங்களில் 20 முதல் 35 நாட்கள் நடைபெறும் மழைக்கால தொடருக்காகவும் நவம்பர் மற்றும் டிசம்பர் மாதங்களில் 20 முதல் 34 நாட்கள் நடைபெறும் குளிர்கால கூட்டத் தொடருக்காகவும் கருத்தாய் ஜெபிப்போம்.
5. இந்த 3 விதமான பாராளுமன்ற கூட்டத் தொடர்களில் கலந்து கொள்ளும் ஒவ்வொருவருக்கும் தேவ ஆலோசனை வெளிப்படவும், தேசத்தை வளர்ச்சிப் பாதையில் கொண்டு செல்வதற்கேதுவான சரியான, நியாயமான தீர்மானங்களை எடுக்கவும் ஜெபிப்போம்.
6. சிறுபான்மை மக்கள் மாற்றுத் திறனாளிகள் மற்றும் ஒடுக்கப்பட்ட மக்களுக்கு நன்மை பயக்கும் அநேக திட்டங்களை நிறைவேற்ற ஜெபிப்போம்.
7. எதிர்கட்சியினர் பாராளுமன்றத்தில் வெளிநடப்பு செய்து மக்களின் பணத்தை வீணாக்காதவாறும், பொறுப்புணர்வோடு நடந்துகொள்ளவும் ஜெபிப்போம்.

**“உன்னதமானவராகிய கர்த்தர் பயங்கரமானவரும், பூமியின் மீதெங்கும் மகத்துவமான இராஜாவுமாயிருக்கிறார்”.** சங்கீதம் : 47:2

**இந்திய மாநிலங்களுக்கான ஜெபக்குறிப்புகள்**

1. மதமாற்ற தடைச்சட்டம் அமுலில் உள்ள மாநிலங்களில் தேவன் ஆட்சியாளர்களோடு இடைபட்டு அவைகளை வாபஸ் பெற வேண்டுமென்று ஜெபிப்போம்.
2. மதச்சார்பற்ற, நடுநிலையான, நேர்மையான, ஸ்திரமான, அரசாங்கங்களை தேவன் மாநிலங்கள் தோறும் அமைத்துத் தர வேண்டி ஜெபிப்போம்.
3. முதலமைச்சர், மாநிலத்துறை அமைச்சர்கள் மற்றும் சட்டசபை உறுப்பினர்கள், மக்கள் நலம் கருதி பணி செய்யவும், இயேசுவை ஏற்றுக்கொண்டு அவரைப் போல நன்மை செய்கிறவர்களாய் காணப்படவும் ஜெபிப்போம்.
4. அனைத்து மாநில தலைநகரங்களிலும், திருச்சபைகளும், ஊழியங்களும் பெருக வேண்டுமென்று ஜெபிப்போம்.
5. அனைத்து மாநிலங்களிலும் சமாதானம் நிலவ, வறுமை ஒழிய, சாதி, சமய பேதங்கள் ஒழிய வேண்டுமென்று ஜெபிப்போம்.

6. மாநிலங்களுக்கு இடையேயான மொழிப்பிரச்சினைகள், இனப்பிரச்சினைகள். தண்ணீர் பிரச்சினைகள் மற்றும் எல்லைப் பிரச்சினைகள் தீரவும், சமூக உறவுகளில், சமாதானம் காணப்பட வேண்டி ஜெபிப்போம்.

7. ஒவ்வொரு மாநிலங்களிலும் ஊழியர்கள் பெருக வேண்டி ஜெபிப்போம்.

8. ஒவ்வொரு மாநிலங்களிலும் இரட்சிக்கப்பட்ட, கர்த்தருக்குப் பயந்து நடக்கின்ற மனிதர்கள் சட்டசபைகளுக்கென்று தெரிந்து எடுக்கப்படுவதற்கும், அமைச்சர்கள், முதலமைச்சர்களுக்காகவும் வேண்டி ஜெபிப்போம்.

**ஒவ்வொரு மாநிலத்தின் மாவட்டங்களுக்கான ஜெபக்குறிப்புகள்**

1. அனைத்து மாவட்டங்களிலும் இயேசுவைக் குறித்த சாட்சி வல்லமையாய் அறிவிக்கப்பட வேண்டும்.

2. அனைத்து மாவட்ட வீதிகளிலும், திருச்சபைகள் எழும்ப வேண்டி ஜெபிப்போம்.

3. மாவட்ட நிர்வாகங்கள் நீதியும், நேர்மையுமாய் செயல்படவும், மக்களின் முன்னேற்றத்திற்கான திட்டங்களை வகுத்து செயல்படவும் ஜெபிப்போம்.

4. ஒவ்வொரு மாவட்டத்திலும் மத நல்லிணக்கம் காக்கப்பட வேண்டி ஜெபிப்போம்.

5. மதக்கலவரங்கள், வன்முறைகள், ஊழல், லஞ்சம் விபத்துகளை முற்றிலுமாய் குறைப்பதற்கு மாவட்ட நிர்வாகம் முனைப்பாய் செயல்பட ஜெபிப்போம்.

6. சட்டம், ஒழுங்கு காக்கப்பட, மக்கள் சுதந்திரமாய் பாதுகாப்பாய் வாழ்வதை மாவட்ட நிர்வாகம் உறுதி செய்ய வேண்டி ஜெபிப்போம்.

7. மாவட்ட நிர்வாகம் மதம் மற்றும் அரசியல் சார்பின்றி செயல்பட ஜெபிப்போம்.

8. மாவட்ட நிர்வாகம் மத்திய, மாநில அரசுகளின் திட்டங்கள் நேர்மையாய் செயல்படுத்த வேண்டி ஜெபிப்போம்.

**இந்தியாவில் நடைபெறும் ஊழியங்களுக்கான ஜெபக்குறிப்புகள்**

1. வட இந்தியாவில் ஊழியங்களைச் செய்துவரும் அனைத்து மிஷனெரி ஸ்தாபனங்–களுக்காகவும், அதன் தலைவர்களுக்காகவும் ஊழியத்தின் தடைகள் நீங்கவும் ஜெபிப்போம்.

2. இந்தியாவில் நடைபெறும் அனைத்து சுவிசேஷ ஊழியங்களுக்காகவும், ஊழியர்களுக்காகவும், ஊழியத்தில் எதிர்ப்புகள் நீங்கவும் ஜெபிப்போம்.

3. இந்தியாவில் உள்ள அனைத்து கிறிஸ்தவ திருமண்டலங்கள், திருச்சபைகள், மற்றும் பிற சபைகளுக்காகவும், பேராயர்கள், குருமார்கள், போதகர்கள் மற்றும் விசுவாசிகளுக்காகவும் திருச்சபைப் பணிகள் தொடர்ந்து மென்மேலும் வளர்ந்து பெருகவும் ஜெபிப்போம்.

4. சமுதாயப் பணி, இலக்கியப்பணி, ஆடியோ, வீடியோ மற்றும் தொலைக்காட்சி ஊழியங்கள் போன்றவற்றைச் செய்து வரும் கிறிஸ்தவ ஸ்தாபனங்களுக்காக ஜெபிப்போம்.

நன்றி : **ஜெபக்கடிதம்**




**இந்தியா நம் தாய் நாடு. நாம் இந்தியர் என்பதில் பெருமை கொள்கிறோம்.** எல்லாவித வளமும் ஒருங்கே பெற்ற நாடு இந்தியாவாகும். நீர்வளம், நிலவளம், மக்கள்வளம், மொழிவளம், இறைபக்திவளம், கலாச்சாரவளம் என்று அனைத்து வளம் பெற்ற நாடு நம் நாடு. இதில் சிறப்பு என்னவென்றால் வேற்றுமையில் ஒற்றுமை கொண்ட நாடு நம் நாடு ஒன்று தான். இதை உலகமே வியந்து நோக்குகிறது.

மொழிகள் பல பேசும் மக்கள், அதினால் ஒருவரை ஒருவர் புரியாத நிலை இந்தியாவில் இல்லை. பலவித மதங்களைப் பின்பற்றுவோர் இங்குண்டு. ஆனால் மத வேற்றுமை இங்கு இல்லை. கலாச்சாரங்கள் பலவிதம் இங்குண்டு. மனதால் பிரியாதவர்களும் நம்மில் உண்டு. அரசியல் கொள்கையால் பல பிரிவுகள் உண்டு. ஆனால் அரசியலால் பிளவுபட்டோர் நம்மில் இல்லை. உணவுப்பழக்கங்கள் பல உண்டு. ஆனால் சுவை மிகு உணவு தயாரிப்போரும் நம்மில் உண்டு. இப்படி வேற்றுமையில் ஒற்றுமை காண்கிறோம். எல்லா வேற்றுமைகளையும் சகித்து கொள்ளும் போக்கை நம் மக்கள் பெற்றுள்ளனர். இதுவே இறைவனின் அற்புத செயலாகும். இதே போன்ற வேற்றுமை உலகில் வேறு எங்கு இருந்தாலும் தினமும் குழப்பங்களும், கலவரங்களும் ஏற்பட்டு நாடு சின்னா பின்னமாகி விடும்.

இத்தனை வேற்றுமையை சகிக்கும் நமக்கு சிலவற்றை மனதார சகிக்க முடியாத அளவுக்கு மிஞ்சி உள்ளது. அதுதான் சுயநலத்தால் எழுந்த ஊழல் பெருநோய், பல உயிரை பலிகொண்ட தீவிரவாதம், மதவாதம் அதோடு பிரிக்க முடியாத வேசித்தனம் நமது தேசத்திற்கு ஓர் தலைகுனிவை ஏற்படுத்தியுள்ளது. வேசித்தன ஆவி உலகமெங்கிலும் இருப்பதும் அது அரசியல் தலைவர்கள், மதத்தலைவர்களை, வயது வரம்பின்றி கடுமையாக அநேகரைப் பிடித்து ஆட்டி வருகிறது. எத்தனை கற்பழிப்புகள், எத்தனை இளம் வயது பெண்களை, ஏன் சிறுமிகளின் கடத்தல் தினசரி முக்கிய செய்திகளாக போய்விட்டது. இதை நினைக்கும் போது இந்தியா இந்த வேசித்தன ஆவியின் பிடியிலிருந்து எப்போது மீண்டு வரும் என்பது தான் நம் ஏக்கமாகும்.

எல்லா வளமும் இருந்தும், வேற்றுமையை சகிக்கும் பண்பு இருந்தும் வன்முறை, கடத்தல், கற்பழிப்பு, கொத்தடிமை போன்ற தரம் கெட்ட செயல்கள் நமக்கு பெரும் வேதனை தரும் செய்தியாகும். இதை எப்படி அணுகுவது என்றால் இந்தியன் ஒவ்வொருவனுக்கும் இயேசுவை, அவர் அளிக்கும் இரட்சிப்பை கொடுத்தால் தான் பொல்லாப்பிலிருந்து மீள முடியும். நன்மையான காரியங்கள் எத்தனையோ இந்திய மண்ணில் உண்டு. அகற்ற முடியாத தீமைகள் புற்றுநோய் போல் நம் சமுதாயத்தை செல்லரித்துக் கொண்டிருக்கிறது.

குஜராத், மத்தியப்பிரதேசம், இராஜஸ்தான் மாநிலத்தில் வாழும் பீல் இன மக்கள் முதலில் தீயோனின் பிடியில் இருந்து இவ்வாறு ஒழுங்கற்ற முறையில் வாழ்ந்து வந்தனர். அவர்களுக்கு இயேசுவையும் அவர் தரும் இரட்சிப்பையும் கொடுத்தவுடன் ஒன்றரை இலட்சம் பேர் நல்வழியில் நடத்தப்பட்டனர்.

குடிகாரர்கள், கொள்ளைகாரர்கள், மந்திரவாதிகள், பூஜாரிகள் என்று இந்த பீல் இனத்திலுள்ளவர்கள் இயேசுவின் நற் சுவிசேஷத்தால் தலை கீழான மாற்றம் பெற்றுள்ளனர். பீல் இனச் சிறுவர்கள் கல்வி அறிவு இல்லாதவர்கள். இப்போது முறைப்படி கல்விகற்று உயர்ந்த நிலைக்கு வந்துள்ளனர். இன்னும் 10 ஆண்டுக்குள் கல்வி கல்லாதோர் இல்லை என்ற நிலைக்கு வந்து, அரசில் பொறுப்பான பதவிகளில் பீல் மக்கள் அமர்ந்திட நம்பிக்கையுடன் அரும்பிரயாசப்படுகிறது நமது ஷாலோம் ஊழியம். இயேசுவின் சுவிசேஷம் தான் நம் நாட்டின் சீர்கேட்டை மாற்றக் கூடியது. ஆகவே இன்றைய கிறிஸ்தவ விசுவாசிகள் சுவிசேஷத்தை வசிக்கும் இடத்தில் சொல்லவும், சுவிசேஷப்பணி செய்வோரை ஜெபத்தாலும், ஈகையாலும் தாங்கவும் தீர்மானித்து செயல்பட வேண்டும்.

அதை விட்டுவிட்டு ஆவியின் வரங்கள், குடும்பத்தில் உலக ஆசீர்வாதங்களை நாடி இதற்காக தங்கள் பணத்தையும், நேரத்தையும் வீணாக செலவழித்து மாயையைப் பின்பற்றி போகின்றனர். ஒவ்வொரு இந்தியனும் இயேசுவால் பெரும் இரட்சிப்பை தாங்களும் பெற்று திருந்திவிட்டால் இந்தியாவின் எல்லா வளங்களும் வீண் அடிக்கப்படாமல், இந்தியாவின் செழிப்பிற்கு உதவும் . இவ்வாறு இந்தியாவின் ஒவ்வொரு மனிதனும் மாறிவிட்டால் கவலையளிக்கும் தீய செயல்கள் அடியோடு இல்பொருளாகி நம் நாடு ஒரு செல்வச்சிறப்புமிக்கதோர் வல்லரசு நாடுகளில் ஒன்றாக மாறும். அதற்காக இயேசுவின் அடியாளர்களாகிய நாம் இந்திய தேசத்தை சுவிஷேச மயமாக்கி இந்தியாவை ஆளும் பேரரசராய் இயேசுவை அமர்த்தி, வல்லரசாக நம் நாடு விளங்க உதவுவோம்.



**கண்ணீரோடு விதைப்போம்! கெம்பீரத்தோடு அறுப்போம்!**
**வாழ்க நம் பாரதம் . வளர்க நம் பாரதம், வல்லரசாக...**

என்றும் இரட்சகரின் பணியில்
***Bro. J. அற்புதராஜ் மார்காஷிஸ்***

# ஷாலோம் மிஷனெரி ஜெபக்கூடுகை

நாள் : *10.08.2013, சனிக்கிழமை*

நேரம் : *மாலை 5.00 மணி முதல் 7.00 மணி வரை*

*இடம் :* **ஷாலோம் கிளை அலுவலகம்,**
**M.T.N.** பில்டிங், (மகளிர் காவல் நிலையம் அருகில்)
வடக்குத் தெரு, மார்த்தாண்டம்

யாவரும் குடும்பமாய் கலந்து கொண்டு ஊழியங்களுக்காக ஜெபிக்கவும்,
தேவனுடைய ஆசீர்வாதங்களைப் பெற்றுக் கொள்ளவும் அன்பாய் அழைக்கிறோம்.

தொடர்புக்கு: **சகோ. G. செல்வதுரை, Cell : 94876-89869,**
**சகோ. ஜார்ஜ், Cell : 98944-78405 சகோ. கிங்பெர்ட், Cell : 94868-64820**



# A u×T¡0Ü CVdLj§uT¦ jR[j§p
# *நான்கு நாட்கள்*

**Prof. C.S. கிறிஸ்டோபர்**

அன்பு பகிர்வு இயக்கத்தின் வாசகர்களுக்கு இயேசு கிறிஸ்துவின் இனிமையான நாமத்தில் வாழ்த்துதலை தெரிவித்துக் கொள்கிறேன். தேவனாகிய கர்த்தரின் பெரிதான கிருபையினால் என்னையும் என் மனைவி திருமதி **Dr. பிரேமா கிறிஸ்டோபர்** அவர்களையும் 2013 ஜுலை 15–18 வரை அன்பு பகிர்வு இயக்கத்தின் பணித்தளங்களை காண கிருபைச் செய்தார்.

ஜுலை 15ஆம் தேதி காலை 10 மணிக்கு நானும் என் மனைவியும் **பேராயர் தேவதாஸ்** அவர்களையும் அவர் மனைவி **திருமதி. வஹிதா தேவதாஸ்** அவர்களையும் சந்தித்து பின்பு ஷாலோம் அலுவலகத்திற்கு சென்று அதைப் பார்வையிடவும் கர்த்தருக்கு நன்றி செலுத்தி ஜெபிக்கவும் தேவன் கிருபை செய்ததற்காய் ஸ்தோத்தரிக்கிறேன். அதன்பின்பு காலை 11 மணிக்கு **“ஷாரோன் நினைவு மிஷன் மருத்துவமனையின் திறப்பு விழாவில்”** நாங்கள் பங்கு கொள்ள தேவன் கிருபை செய்தார்.

சிறுமைப்பட்டவர்களுக்கு சுவிசேஷத்தை அறிவிக்க கர்த்தர் அபிஷேகித்து பீல் இன மக்களுக்கும், மற்றவர்களுக்கும் மருத்துவ சிகிச்சையளித்து கர்த்தருடைய அன்பு வெளிப்பட கிருபை செய்த தேவனை ஸ்தோத்திரிக்கிறேன். அதே நாளில் மாலை 3 மணிக்கு ஷாலோம் ஸ்தாபனத்தின் 22 ஆண்டுகள் கர்த்தருடைய பணியை முடித்து 23வது ஆண்டை துவங்க தேவன் கிருபை செய்தார். அந்தக் கூடுகையில் ஷாலோம் ஸ்தாபனத்தின் மூத்த போதகர்கள் 100 பேரும், அவர்களுடைய குடும்பங்களும் கலந்து கொண்டு கர்த்தரை மகிமைப்படுத்தினார்கள். அந்தக் கூடுகையில் **“என் பிரியமே, என் ரூபவதியே... கன்மலையின் வெடிப்பில் தங்குகிற என் புறாவே, உன் முகத்தைக் காண்பி, உன் சத்தத்தை நான் கேட்கட்டும்”** உன்னதப்பாட்டு 2:10–14 என்ற வாக்குத்தத்தைத் தந்து கர்த்தர் என் மூலம் அவருடைய வார்த்தையை பகிர்ந்து கொள்ள கிருபை செய்தார். அந்த வார்த்தைகளை **சகோதரி. வஹிதா தேவதாஸ்** அவர்கள் மொழி பெயர்க்க அங்கு கூடியிருந்த மக்கள் அனைவரும் தேவபிரசன்னத்தை உணர்ந்து கர்த்தர் தந்த வாக்குத்தத்தங்களை உறுதியாய் பிடித்துக் கொண்டு செல்ல கிருபை செய்த தேவனை ஸ்தோத்தரிக்கிறேன். அன்றிரவே மருத்துவமனையைக் குறித்து மருத்துவர்களோடு ஆலோசனை செய்ய தேவன் அருள்புரிந்தார்.

ஜுலை 16ஆம் தேதி ஜெரி கிராமத்தில் சிறுவர்களுக்கான Compassion திட்டத்தின் மூலம் பயனடைந்து வருகிற சிறுவர்களைக் கண்டோம். அத்திட்டத்தின்படி தினந்தோறும் 200 பீல் சிறுவர்களும் பயில்வதற்கு தேவையான அனைத்து வசதிகளும், உணவுகளும் அளிக்கப்படுகிறது. அங்கே எங்கள் மூலம் கட்டி முடிக்கப்பட்ட சமையல் அறையை பிரதிஷ்டை செய்ய தேவன் அருள்புரிந்தார். என் மனைவி **Dr. பிரேமா கிறிஸ்டோபர்** அவர்கள் சிறுபிள்ளைகளுக்கு மருத்துவ பரிசோதனை நடத்தினார்கள்.

அதே நாளில் குஜராத்திலுள்ள தாகோத்தில் மத்தியப்பிரதேச ஊழியர் கூடுகையில் 130 போதர்கள் கூடியிருந்தார்கள். அவர்களுடைய அன்பான கலாச்சார வரவேற்பை ஏற்றுக்கொண்டு மிகுந்த கனிகளைக் கொடுங்கள், யோவான் 15:8 என்ற தலைப்பில் அவர்களோடு கர்த்தருடைய வார்த்தையை பகிர்ந்து கொள்ள தேவன் கிருபை செய்தார். தேவன் ஒவ்வொருவரையும் மிகுந்த கனிகளைக் கொடுக்கும் பாத்திரங்களாகவும், அவருக்குப் பிரியமான சீஷர்களாகவும் தேவன் அவர்களைத் தெரிந்து கொண்டார் என்று உணரச் செய்த தேவனுக்கு ஸ்தோத்திரம். அவர்கள் 1000 கிராமங்கள் 1000 போதகர்கள், 10,0000 ஆத்துமாக்கள் இன்றும் 3 ஆண்டுகளில் எட்டி பிடிக்க கண்களை ஏறெடுத்து தேவனை நோக்கி ஜெபித்தார்கள்.

ஜுலை 17ம் தேதி காலை 10 மணிக்கு இராஜஸ்தானிலுள்ள கொய்கா என்ற இடத்தில் ஷாலோம் ஊழியத்தினுடைய பயிற்சி மையத்திற்கான கட்டிட பணியைக் கண்டோம். **போதகர். பாதர் பாரியா** அவர்களின் சபையிலுள்ள 50 குடும்பத்தினருக்கு **திரு. ஜோசப் தங்கசாமி** அவர்கள் குடும்பத்தின் சார்பாக 50 ஹிந்தி வேதாகமங்களை வழங்கினோம். பின்பு மதியம் 1 மணிக்கு **போதகர். மகிப்பால்** அவர்கள் நடத்திவரும் இட்டாலா சபையை பிரதிஷ்டை செய்து அங்கே கர்த்தருடைய வார்த்தையை நான் அர்களோடு பகிர்ந்து கொள்ள தேவன் கிருபை செய்தார். **திரு. கேரட்** அவர்கள் அதை மொழி பெயர்த்தார்கள். அந்த ஆலய மக்களுக்கு ஆசீர்வாதமாக இருந்தது.

மாலை 4 மணியளவில் ராஜஸ்தானிலுள்ள செவனியாவில் 240 சுதேச ஊழியர்கள் மத்தியில் **சகோதரி. வஹிதா தேவதாஸ்** அவர்கள் ஆராதனை நடத்தினார்கள். நான் கர்த்தருடைய செய்தியைக் கொடுக்க **திரு. கேரட்** அதை ஹிந்தியில் மொழி பெயர்க்க தேவன் கிருபை செய்தார். அதே நேரத்தில் **Dr. பிரேமா கிறிஸ்டோபர்** அவர்கள் **சகோ. டைட்டஸ், சகோதரி. மெர்லின் டைட்டஸ்** அவர்களோடு இணைந்து பிஜல்பூரில் இருந்த ஷாலோம் பள்ளி மற்றும் விடுதிக்கு சென்று அங்குள்ள பள்ளியில் இருந்த 370 பிள்ளைகளையும், விடுதியில் படிக்கும் 250 பிள்ளைகளையும் கண்டு அவர்கள் நலனை அறியவும் தேவவழியில் அவர்கள் நடத்தப்படுதலையும் கண்டுவரவும், அவர்களுக்கு தேவையான பாடப்புத்தகங்கள், நோட்டு, பென்சில், இதர தேவையான பொருட்கள் அனைத்தையும் அவர்களுக்கு வழங்க தேவன் கிருபை செய்தார்.

மாலை 7 மணியளவில் தாகோத்திற்கு திரும்பி வரும் வழியில் 1991ஆம் ஆண்டு பேய் பங்களா என அழைக்கப்பட்ட ஜாலோத்திலுள்ள பங்களாவுக்குச் சென்று வந்தேன். ஒருவரும் அணுகாத வீடாயிருந்தது. அந்த வீட்டில்தான் பேராயர் அவர்களும், அவர்கள் மனைவி **வஹிதா தேவதாஸ்** அவர்களும் முதலில் குடியேறி சுவிசேஷத்தை அறிவித்தார்கள்.

ஜுலை 18ம் தேதி காலை மத்தியப்பிரதேசத்திலுள்ள அந்தர்வேலியா என்ற இடத்திற்கு வரும் பாதையில் பிட்டோல், கேடி போன்ற பகுதிகளில் அநேக ஆலயங்கள் கட்டியிருப்பதைக் கண்டேன். அந்தர்வேலியாவில் 10 ஆண்டுகளுக்கு முன்பு அர்மடா வாகனம் கிறிஸ்தவ எதிர்ப்பாளர்களால் எரிக்கப்பட்டு தீக்கிரையாக்கப்பட்டது. ஆனால் இன்றோ கர்த்தருடைய பெரிதான கிருபையினால் அந்தர்வேலியாவில் பெரிய ஆலயம் செயல்படுவதோடு Compassion திட்டத்தின் மூலம் 250 பிள்ளைகளுக்கு கல்வியோடு உணவும், 60 கர்ப்பிணிப் பெண்களுக்கு உணவும் வழங்கப்பட்டு வருகிறது. அந்த நாளில் பிள்ளைகளுக்கு ஸ்கூல்பேக், மற்றும் தேவையான பொருள்களை வழங்கி, வருவாய் பெருக்குவதற்காக ஒரு நபருக்கு 2 ஆடுகள் வீதம் 54 பெண்களுக்கு கொடுக்கப்பட்டது. இதை நாங்கள் ஜெபித்து வழங்கினோம்.

என் மனைவி பகிர்ந்து கொண்ட மருத்துவ கருத்துகளைக் பெண்கள் கேட்டு கர்த்தரின் ஆலோசனையை பெற்றுக் கொண்டார்கள். எரிக்கப்பட்ட ஆலயத்தில் கர்த்தர் எழும்பி தம் கிராம மக்களை **“எழும்பி பிரகாசி”** என்ற வேதவாக்கின்படி நூற்றுக்கணக்கான விசுவாசிகளை எழும்பி பிரகாசிக்க செய்ததைக் கண்டு கர்த்தருக்கு நன்றி செலுத்தினேன்.

கடைசி நாளில் குஜராத்தில் தஸ்லா என்ற கிராமத்தைச் சேர்ந்த 70 வயதான சகன் பாய் சங்காடா அவர்களைக் குடும்பத்துடன் சந்திக்க வாய்ப்பு கிடைத்தது. இவர் கிறிஸ்துவை ஏற்றுக் கொள்வதற்கு முன்பு பெரிய குடிகாரராகவும், திருடனாகவும், வில் அம்பை வைத்து துன்புறுத்துகிறவராய் காணப்பட்டார். மேலும் 38 முறை சிறைச்சாலை சென்று திரும்பிய இவரது மனைவி பிசாசின் பிடியினால் கூனியாக இருந்தவர் ஷாலோம் சுதேச ஊழியரின் ஜெபத்தின் மூலம் அற்புத சுகத்தைப் பெற்று, ஆண்டவரை ஏற்றுக் கொண்டு இவர்களுடைய நிலத்தில் ஆலயம் கட்டப்பட்டு 32 குடும்பங்கள் ஆராதித்து வருகிறார்கள். இவரது பேரன் மடியா சங்காடா சபைப் போதகராய் இருப்பது மிகுந்த ஆச்சரியத்தைக் கொடுத்தது.

திருநெல்வேலி N.G.O. B காலனி பேதுரு ஆலய சபையினரால் தாங்கி வருகிற 24 பீல் சுதேச ஊழியர்களுக்கு தலா 1000 ரூபாய் மதிப்பிலான போர்வைகளும், கிறிஸ்தவ புத்தகங்களும் வழங்க தேவன் கிருபைச் செய்தார். வழங்கிய குடும்பத்தார், சபை போதகர் மற்றும் சபைமக்கள் அனைவரையும் தேவனாகிய கர்த்தர் ஆசீர்வதிப்பாராக. அந்த நான்கு நாட்கள் ஒரு குட்டி பரலோகமாயிருந்ததை நினைத்து மிகுந்த மகிழ்ச்சியடைகிறேன். இவர்களுக்காய் ஜெபிக்கிற உங்கள் ஒவ்வொருவருடைய ஜெபமும், நீங்கள் அனுப்புகிற காணிக்கை ஒவ்வொன்றுக்கும் தேவன் மிகுந்த பலனைத் தந்திருக்கிறார் என்பதைக் கண்டு மிகுந்த மகிழ்ச்சியடைகிறேன். தொடர்ந்து ஜெபியுங்கள்! மனமுவந்து தாங்குங்கள்! இன்னும் அறிவிக்கப்படாத அநேக பீல் கிராமங்கள் உண்டு. செய்ய வேண்டிய பணிகள் அநேகமுண்டு. ஆகவே நம் ஷாலோம் மிஷனெரி பணிகளுக்காக அதிகமாய் ஜெபிப்போம். ஊழியங்களைத் தாங்குவோம் கர்த்தர்தாமே உங்களை ஆசீர்வதிப்பாராக!

கண்டு விசுவாசிப்பதை விட காணாமல் விசுவாசிப்பவன் பாக்கியவான் (யோவான் 20:29) என்ற வாக்குத்தத்தத்தின்படி நீங்கள் பாக்கியவான்களாயிருக்கிறீர்கள். அதற்காய் தேவனை ஸ்தோத்திரிக்கிறேன். அந்த 4 நாட்களும் எங்களை அன்புடன் அழைத்து, உபசரித்து ஊழியங்களில் பயன்படுத்தி கனப்படுத்திய அன்பு **பேராயர் V. தேவதாஸ்** அவர்களுக்கும், அவர்கள் துணைவியார் **சகோதரி. வஹிதா தேவதாஸ்** மற்றும் பிள்ளைகளுக்கும் எங்கள் அன்பு வாழ்த்துதலோடு நன்றி கூறுகிறோம். கர்த்தராகிய இயேசு கிறிஸ்துவுக்கு மகிமை உண்டாவதாக!

---

**“அவரை விசுவாசியாதவர்கள் எப்படி அவரைத் தொழுதுகொள்ளுவார்கள்?**
**அவரைக்குறித்துக் கேள்விப்படாதவர்கள் எப்படி விசுவாசிப்பார்கள்?**
**பிரசங்கிக்கிறவன் இல்லாவிட்டால் எப்படிக்கேள்விப்படுவார்கள்?**
**அனுப்பப்படாவிட்டால் எப்படிப் பிரசங்கிப்பார்கள்?.....”** ரோமர் 10 :14,15

# ஷாலோம் ஊழியங்களின் 22ம் ஆண்டு நிறைவு ஸ்தோத்திரக் கூடுகை





உற்சாகமான கலாச்சார வரவேற்பு



சிறப்பு செய்தியளிக்கும் Prof. C.S. கிறிஸ்டோபர் அவர்கள்



தரிசனப் பகிர்வு – பிஷப் V. தேவதாஸ் அவர்கள்




வாழ்த்துச் செய்தியளிக்கும் Dr. ஜாலி ஏபல் அவர்கள்



பாடல் மற்றும் ஆராதனை வேளை





தேவனுக்கு துதிகளை ஏறெடுக்கும் மூத்த சுதேச ஊழியர்கள் மற்றும் அவர்களது மனைவிமார்கள்

# Prof. C.S. கிறிஸ்டோபர் & Dr. பிரேமா கிறிஸ்டோபர் அவர்களின் பணித்தள வருகை - 2013, ஜுலை, 15 - 18




இராஜஸ்தான் ஊழியர் கூடுகையில் வரவேற்பு



இராஜஸ்தான் ஊழியர் கூடுகையில் கூடியிருந்த ஊழியர்கள்



பாளை, NGO B காலனி CSI St. Peter's Church மூலமாக தாங்கப்படும் 24 ஊழியர் குடும்பத்திற்கான அன்பளிப்புகள்



ஜெரி Compassion திட்டத்திற்கான சமையலறையை திறந்து வைக்கும் Dr. பிரேமா அவர்கள்



ஜெரி Compassion திட்டத்திலுள்ள சிறுவர்களுக்கு மருத்துவப் பரிசோதனை அளிக்கும் Dr. பிரேமா அவர்கள்



ஜெரி கிராம ஆலயத்தில் சிறுவர்களின் உற்சாக கலை நிகழ்ச்சிகள்



ஜெரி Compassion திட்டப் பணித்தளத்திற்குச் செல்லும் போது





அந்தர்வேலியா கிராமத்தில் Compassion திட்டத்தின் மூலம் 54 குடும்பங்களுக்கு ஆடுகள் வழங்குதல்



அந்தர்வேலியா கிராம ஆலயத்தில் கலாச்சார வரவேற்பு



அந்தர்வேலியா கிராம ஆலயத்தில் வாழ்த்துச் செய்தி – Dr. பிரேமா அவர்கள்





அந்தர்வேலியா கிராமத்தில் Compassion சிறுவர்களுக்கான நோட்டுப்புத்தகங்கள் மற்றும் பேக்குகள் வழங்குதல்



கோய்க்கா, இராஜஸ்தான் பேராலயத்திற்கு முன்பு ஊழியர் மற்றும் விசுவாசிகளுடன் Prof. C.S. கிறிஸ்டோபர்



கோய்க்கா, ஆலய விசுவாசிகளுக்கு 50 வேதாகமம் வழங்குதல்

# ஷாரோன் நினைவு மருத்துவமனை திறப்பு விழா.

## தாகோத், குஜராத், 15.07.2013



சிறப்பு வரவேற்பு – வேலரி மேடம் அவர்கள்




மருத்துவமனை பெயர்ப் பலகை திறப்பு





டாக்டர் இன்பக்குமார் அவர்களை கௌரவித்து வேதப்புத்தகம் வழங்குதல்





கட்டிடம் மற்றும் டாக்டர் அறைகளைத் திறந்து வைக்கும் டாக்டர் பிரேமா & Prof. C.S. கிறிஸ்டோபர் அவர்கள்



மருந்து பிரிவு திறப்பு – டாக்டர் ஏபல் அவர்கள்



உள்நோயாளிப் பிரிவு திறப்பு – சகோதரி ஜாய் ஷெக்கினா அவர்கள்





சிறப்புரை – பேராயர் வே. தேவதாஸ் அவர்கள்



வாழ்த்துரை – சகோ. மகேந்திர கட்டாரா அவர்கள்





வாழ்த்துரை – சகோ. ரெஜினால்ட் சாலமோன் மற்றும் சகோதரி சாந்தா சாலமோன் அவர்கள்



மருத்துவமனைக்கான சிறப்பு ஜெபம் – சகோதரி வஹிதா தேவதாஸ்



வாழ்த்துரை – Prof. C.S. கிறிஸ்டோபர் அவர்கள்




மருத்துவமனையின் முன்பு Dr. இன்பக்குமார் மற்றும் சகோதரி ஜாய் ஷெக்கினா




நன்றி கூறும் நிர்வாக பொறுப்பாளர் சகோ. வாலஸ் அவர்கள்

## இராஜஸ்தான் - இட்டாலா கிராம ஆலயப் பிரதிஷ்டை - 17.07.2013



விசுவாசிகளுடன் ஆலயத்தின் முன்பு



பிரதிஷ்டை செய்யும் Prof. C.S. கிறிஸ்டோபர் அவர்கள்



கலாச்சார வரவேற்பு



தேவனை ஆராதிக்கும் விசுவாசிகள்

## குஜராத் காந்திநகர் GREEN CITY BIBLE CHURCH ஆராதனை - 07.07.2013





பேராயர் அவர்களை வரவேற்கும் சகோ. D.K. ராவ் IAS - சகோ. ஜெகதீச பாண்டியன் IAS



ஆராதனை வேளை





சபைப் போதகர் மற்றும் மூப்பர்களுடன்

Green City Bible Church –ன் 7வது வருட நிறைவு விழாவிற்கு நமது பேராயர் தேவதாஸ் அவர்களை செய்தி கொடுக்கும்படியாக அழைத்த சபை போதகர் சாம் ஜோசுவா அவர்களுக்கும் சகோ. D.K. ராவ் IAS - சகோ. ஜெகதீச பாண்டியன் IAS அவர்களுக்கும், ஷாலோம் ஊழியத்தின் சார்பில் எங்களது மனமார்ந்த நன்றியைத் தெரிவித்துக் கொள்கிறோம். கர்த்தர்தாமே இவர்களை அதிகமாய் ஆசீர்வதிப்பாராக!

## 10 இலட்ச ஆத்துமாக்கள் அறுவடைத் திட்டம் சுகமளிக்கும் கூட்டங்களில் நடைபெற்ற அற்புத சாட்சிகளில் ஒரு சில....



பெயர் : **பாபுடி டாமோர்**

கிராமம் : சிமல்பாடா, மத்தியப்பிரதேசம், வயது : 22

2008–ம் வருடம் எனக்கு திருமணம் நடைபெற்றது. திருமணமான இரண்டாவது மாதத்தில் நான் புத்தி சுயாதீனம் இல்லாமல் போய்விட்டேன். மந்திரவாதிகளிடம் சென்று பூஜைகளைச் செய்து, 1 லட்சம் ரூபாய்க்கு மேல் செலவு செய்தும் எந்த வித பிரயோஜனமுமில்லாமல், இரும்பு சங்கிலியால் என்னைக் கட்டி வைத்திருந்தார்கள். கடந்த ஏப்ரல் மாதம் காளாகேத் ஷாலோம் கிராம ஆலயத்தில் நடைபெற்ற சுகமளிக்கும் கூட்டத்தில் இரும்பு சங்கிலியோடு என்னைக் கட்டி கொண்டு சென்றார்கள். ஊழியர் எனக்காக எண்ணெய் பூசி ஜெபித்த போது நான் பரிபூரண சுகம் பெற்றேன்.



பெயர் : **தாவ்ரியா கட்டாரா**

கிராமம் : பரோயா, மத்தியப்பிரதேசம், வயது : 42

நான் 2 வருடமாக கை, கால் செயலிழந்தவனாய் இருந்தேன். என்னால் எந்த வேலையும் செய்ய முடியாது. சுமார் 40,000 ரூபாய் செலவு செய்து மருத்துவம் செய்தும் கூட எந்த பலனும் இல்லை. கடைசியில் சிமல்பாடாவில் நடைபெற்ற சுகமளிக்கும் கூட்டத்திற்கு என்னை ஒரு வண்டியில் வைத்து கொண்டு வந்தார்கள். அங்கு ஊழியக்காரர் ஜெபித்த போது தேவன் என்னைத் தொட்டார். எனக்கு கை, கால் பெலன் கிடைத்து நான் பூரண சுகம் அடைந்தேன். தேவனுக்கே மகிமை!



பெயர் : **ஹாவா பேன்**

கிராமம் : ஜாமுடி, மத்தியப்பிரதேசம், வயது : 35

நான் 4 வருடமாக உதிரப் போக்கு வியாதியினால் அதிக கஷ்டப்பட்டேன். ரூபாய் 1.5 லட்சம் செலவு செய்து மந்திரம் மற்றும் மருத்துவம் செய்தும், வியாதியிலிருந்து எனக்கு விடுதலை கிடைக்கவில்லை. பின்பு உதய்புரா ஷாலோம் ஆலயத்தில் நடைபெற்ற சுகமளிக்கும் கூட்டத்தில் பங்கு பெற்றேன். ஊழியர் வியாதியஸ்தர்களுக்காக ஜெபித்த போது எனது உதிரப்போக்கிலிருந்து பூரண சுகம் பெற்றேன். விடுதலை தந்த தேவனுக்கு ஸ்தோத்திரம்!

# ஆதரவாளர்களின் கவனத்திற்கு.



கர்த்தருடைய நாமத்திற்கு மகிமை உண்டாவதாக! குஜராத், இராஜஸ்தான், மத்தியப்பிரதேசம் ஆகிய மாநிலங்களில் வாழும் ஒரு கோடிக்கும் அதிகமான பீல் ஆதிவாசி ஜனங்களின் மத்தியில், ஷாலோம் ஊழியங்கள் மூலமாக தேவன் இன்று பெரிய காரியங்களைச் செய்து வருகிறார். தூத்துக்குடியில் செயல்பட்டுவரும் நமது ஷாலோம் தலைமை அலுவலகத்திலும் தேவன் தமது கிருபையினைத் தந்து ஊழியங்களை நிறைவேற்றி வருகிறார். இங்கு கணக்குகள், ஆதரவாளர் முகவரிகள் மற்றும் விபரங்கள் போன்ற அனைத்துக் காரியங்களும் தனித்தனி கணிணி மூலம் செயல்படுத்தப்பட்டு வந்தன. தற்போது அனைத்துக் காரியங்களையும், ஒரே Software மூலம் செயல்படுத்தலாம் என ஜெபித்துத் தீர்மானித்துள்ளோம். இது ஊழியக் காரியங்களை விரைவாகவும் சிறப்பாகவும் செய்ய ஏதுவாக இருக்கும்.

மேலும் அன்பு பகிர்வு இயக்கம் செய்தி மலருக்கான முகவரிகள் அனைத்தும், புதிய Software மூலமாக ஒழுங்கு செய்யப்பட்டு, அதன் மூலம் இந்த மாத இதழினை உங்களுக்கு அனுப்பியுள்ளோம். ஆகையால் தங்களது முகவரியில் ஏதாவது பிழைகள் இருந்தாலோ, ஒன்றுக்கு மேற்பட்ட பத்திரிகைகள் வந்தாலோ, வேறு நபருடைய பெயரில் வந்திருந்தாலோ தூத்துக்குடி தலைமை அலுவலகத்திற்கு கடிதம், போன், **S.M.S.**, மற்றும் **E-mail** மூலமாகவோ தெரியப்படுத்த அன்பாயக் கேட்கிறோம்

## தூய யோவான் ஸ்நானகன் ஆலயம், குளத்துக்குடியிருப்பு – ஞாயிறு ஆராதனை & அசன விழா



தேவ செய்தியளிக்கும் பிஷப் தேவதாஸ் அவர்கள்



ஆலய கட்டுமானப் பணிக்கான காசோலை

வாழ்த்துகிறோம்...

மதுரை இராமநாதபுரம், திருமண்டலத்திற்கு

புதிய பேராயராக பொறுப்பேற்றுள்ள

பேராயர். அருள்பெருந்திரு. **ஜோசப் லூயிஸ்**

அவர்களின் இறைப்பணி சிறக்க அன்பு பகிர்வு இயக்கத்தின்

சார்பாக இயேசுவின் திருப்பெயரால் வாழ்த்துகிறோம்.



**Rt.Rev.Dr.V. தேவதாஸ்** அன்பு பகிர்வு இயக்கம், குஜராத்.

# ஷாரோன் நினைவு மிஷன் மருத்துவமனை

(A Unit of Shalom Charity Mission)

## ஓர் இனிய ஆரம்பம் – Dr. பிரேமா கிறிஸ்டோபர்

தேவ கிருபையால் கடந்த 22 வருடங்கள் உங்கள் யாவரின் ஜெபங்களினாலும் பீல் மக்கள் மத்தியில் சுவிசேஷ பணியும், சபை வளர்ச்சி பணிகளும் விரைந்து வளர்ந்து வருகிறது. தேவனுக்கே மகிமை!

விசுவாசிகளின் ஆவிக்குரிய வாழ்க்கையை மட்டுமன்றி அவர்களது நல்ல ஆரோக்கியமான வாழ்வையும் தேவன் விரும்புகிறார். கடந்த 10 ஆண்டுகளாக ஷாலோம் மருத்துவ முகாம்கள் மூலம் வருடந்தோறும் 5000 பேர்களுக்கு இலவசமான சிகிச்சை மற்றும் சுமார் 400 பேர்களுக்கு குறிப்பாக ஊழியர், ஊழியக்காரிகளுக்கான **"ஆரம்ப சுகாதார பயிற்சி"** முகாம்களை நடத்த தேவன் கிருபை தந்தார். இந்த சிறப்பு பணிகளை CMC, Vellore Rusha –வில் பணியாற்றிய **Dr. Abel Rajarathinam** மற்றும் அவர்கள் துணைவியார் **Dr. Jolly Abel** அவர்களும், அவர்களுடன் இணைந்து Dr. Inbakumar அவர்களும் வெகுசிறப்பாக நடத்தி தந்தார்கள்.

பல ஆண்டுகளாக கிராமங்களில் வசிக்கும் பீல்மக்களுக்கு சரியான தொண்டுசெய்யும் மருத்துவமனைகள் இல்லாதபடியால் ஷாலோம் ஊழியத்தின் மூலம் ஆரம்பிக்க பாரத்துடன் ஜெபித்து வந்தோம். 1991ம் ஆண்டு ஊழியப்பாதையின் ஆரம்ப நாட்களில், **பேராயர் தேவதாஸ்** அவர்களின் குடும்பத்திற்கு தேவன் தந்த **"ஷாரோன்"** குழந்தை சரியான மருத்துவ வசதியில்லாமல் மரித்து விட்டது. ஆகவே பாரத்துடன் அதிக வருடங்கள் ஜெபித்து வந்தோம். பேராயரின் அன்பு மகள் ஜாய் ஷெக்கினா தன் வாழ்க்கையை மருத்துவப்பணிக்காக அர்ப்பணித்து 3–ஆம் வருட மருத்துவ படிப்பை ரஷ்யாவில் முடித்து வர தேவன் கிருபைச் செய்தார்.

நம் ஜெபத்திற்கு பதில் தந்த தேவன், **Dr. Inbakumar** அவர்கள் CMC, Vellore Rusha –விலிருந்து ஓய்வு பெற்றவுடன் 3 மாநிலங்களில் வாழும் பீல் ஆதிவாசி ஜனங்களுக்காக தன்னை அர்ப்பணித்து ஷாலோம் மருத்துவப் பணிகளை 01–07–2013 அன்று ஆரம்பிக்க கிருபைத் தந்தார். தேவனுக்கே மகிமை உண்டாவதாக! தாகோத்தில் உள்ள நம்முடைய ஷாலோம் கட்டிடத்தில் ஒன்றை மருத்துவப் பணிக்காக ஒதுக்கி, அதை பழுது நீக்கி புதுபித்து அந்த கட்டிடத்தில் 15.07.2013 திங்கட்கிழமை அன்று Sharon Memorial Mission Hospital தேவனுடைய நாமத்தின் மகிமைக்காக பிரதிஷ்டை செய்யப்பட்டது.

15.07.2013 அன்று காலை 11 மணி அளவில் கர்த்தரை பாடித் துதித்து ஆராதனையுடன் ஆரம்பிக்கப்பட்டது. முதலாவது **திருமதி. வஹிதா தேவதாஸ்** அவர்கள் கர்த்தர் அங்கே மருத்துவமனையை ஆரம்பிக்கவேண்டும் என்பதற்கான சூழ்நிலையையும், உருவாக்கின விதத்தையும், அதன் நோக்கத்தையும் தெளிவுபட எடுத்துரைத்தார்கள். முதல் முறையாக நாங்கள் குடும்பமாக பணித்தளத்திற்கு வருகை தந்த போது, இலவச மருத்துவப் பணிகளை நமது பீல் மக்களுக்கு செய்தோம். அப்போதுதான் மருத்துவ உதவியின் அவசியத்தையும் தொடர்ந்து இந்த பணியை செய்ய வேண்டுமென்றும் உற்சாகப்படுத்தப்பட்டோம். 1996–2000 வரை வருடத்திற்கு இருமுறை குஜராத், இராஜஸ்தான் மற்றும் மத்தியப்பிரதேச மாநிலத்தில் **Medivision** (நாகர்கோவில்) மற்றும் **CBN** ஸ்தாபனங்கள் மூலமாக இலவச மருத்துவ முகாம்களை

நடத்தி, மக்களுக்கு சிகிச்சை அளித்து, இயேசு கிறிஸ்துவின் அன்பை வெளிப்படுத்தினார்கள் என்பதையும், அதன் பின்பு கடந்த ஏழு ஆண்டுகளாக **Dr. Abel,** அவருடைய மனைவி **Dr. Jolly Abel** அவர்கள், **Dr. Inbakumar** அவர்கள் தொடர்ந்து ஒவ்வொரு ஆண்டும் வந்து பல மருத்துவமுகாம்களையும், ஆரம்ப சுகாதார பயிற்சிகளையும் நடத்தி பீல் இன சமுதாயத்திற்கே விடுதலையின் விழிப்புணர்வை தேவனாகிய கர்த்தர் காட்டினார். மற்றும் **Dr. Shiju** அவர்களும் மருத்துவப் படிப்பை முடித்து விட்டு ஷாலோம் ஊழியத்தோடு இணைந்து ஓராண்டு காலம் மருத்துவப் பணியை நிறைவேற்றினார்கள் என்று குறிப்பிட்டார்கள்.

அதன்பின்பு **பேராயர் V. தேவதாஸ்** அவர்களும் அவருடைய மனைவி **சகோதரி. வஹிதா தேவதாஸ்** அவர்களும் **ஷாரோன் நினைவு** மருத்துவமனையின் பெயர் பலகையை திறந்து வைத்தார்கள். அதன்பின் நான் (Dr. பிரேமா கிறிஸ்டோபர்) ஜெபித்து அந்த மருத்துவமனையை திறந்து வைக்க தேவன் கிருபைச் செய்தார். அதைத் தொடர்ந்து **Dr. Abel** மருந்து பிரிவு அறையை ஜெபித்துத் திறந்து வைத்தார்கள். அதைத் தொடர்ந்து **Miss.Joy Shekinah** அவர்கள் உள் நோயாளிகளின் பிரிவை திறந்து வைக்க, **சகோதரி. வஹிதா தேவதாஸ்** அவர்கள் ஜெபித்தார்கள். பேராயர் அவர்கள் **Dr. இன்பகுமார்** அவர்களை அம்மருத்துவமனையின் இயக்குனராக நியமித்து வாழ்த்துதல் தெரிவித்தார்.

அதன்பின்பு பெங்களூரில் இருந்து **Dr. இன்பகுமார்** அவர்களின் **சகோதரி திருமதி. சாந்தா சாலொமோன்** அவர்களும், அவரது கணவர் **திரு. ரெஜினால்ட் சாலொமோன்** அவர்களும் கர்த்தரை மகிமைப்படுத்தி வாழ்த்துதல் தெரிவித்தார்கள். மேலும் எனது கணவர் **பேராசிரியர் C.S. கிறிஸ்டோபர்** அவர்களும் தாகோத் CNI சபையை சேர்ந்தச் **திரு. மகேந்திரா கட்டாரா** அவர்களும் அம்மருத்துவமனைக்காக ஜெபித்தார்கள். **Bro. Wallace** நன்றி தெரிவிக்க பேராயர் ஜெபித்து முடிக்க தேவன் கிருபைச் செய்தார். **"இருளில் இருக்கிறவர்கள் பெரிய வெளிச்சத்தைக் கண்டார்கள்"** என்ற வாக்கின்படி இம்மருத்துவமனை பெரிய ஆசீர்வாதமாக அமைந்தது.

**நீங்கள் யாவரும் Sharon Memorial Mission Hospital-க்காகவும், ஏற்று நடத்த உள்ள Dr. Inbakumar அவர்களுக்காகவும், Shalom Charity Mission மூலமாக தாங்கப்படும் இந்த ஊழியங்களுக்காகவும் ஜெபியுங்கள்.**

- ✯ இன்னும் தேவையான Nurses, Lab Technicians போன்ற இதர மருத்துவ பணியாளர்கள் கிடைக்கப் பெற ஜெபியுங்கள்.
- ✯ தேவையான அவசர நிதி உதவிகளுக்காக
- ✯ மருத்துவப் பணிக்கான அவசரமான தேவையான தளவாடங்கள், மருந்து வகைகளுக்கு ரூ. 2 இலட்சங்கள் கிடைக்கப் பெற ஜெபியுங்கள்.
- ✯ மேலும் முதல் 1 வருடத்திற்கு மருத்துவபணியை நடத்துவதற்கான ரூ. 1 இலட்சம் மாதம் கிடைக்கப் பெற ஜெபியுங்கள்.

**தேவன் தாமே உங்களை ஆசீர்வதிப்பாராக!**

இந்த மிஷன் மருத்துவமனைக்கு டாக்டர், Nurses-ஆக எங்களுடன் இணைந்து பணிபுரிய விரும்பினால் எங்களோடு தொடர்பு கொள்ளவும்

மேலும் நிதி உதவி அனுப்ப விரும்பினால் Shalom Charity Mission என்ற பெயரில் தூத்துக்குடி தலைமை அலுவலகத்திற்கு அனுப்பவும்.

# C.T.E. úW ² V v



நெல்லை அப்போஸ்தலன் என்று அழைக்கப்படும் ரேனியஸ் ஐயரின் முழுப் பெயர் : **சார்லஸ் தியாபிலஸ் இவால்டு ரேனியஸ்.** 1790–ம் ஆண்டு நவம்பர் மாதம் 5–ம் நாள் ஜெர்மனி நாட்டில் கிராடஸ் நகரத்தில் பிறந்தார். ஆறு வயதில் தகப்பனாரை இழந்தார். 17வது வயதில் இயேசுவை சொந்த இரட்சகராக ஏற்றுக் கொண்டு பரிசுத்த வாழ்க்கை வாழ்வதற்கு தன்னை அர்ப்பணித்து கிறிஸ்துவின் கட்டளைக்குக் கீழ்ப்படிய வேண்டும் என்ற தாகமும் கொண்டார். 1811 பிப்ரவரி 9ம் தேதி மிஷனெரி ஊழியத்திற்கான அழைப்பின் நிச்சயத்தினைப் பெற்றார். ஆனால் தாயார் நீ கடல் கடந்து மட்டும் போக வேண்டாம் என்றார். **“அம்மா ஆண்டவர் அப்படி உத்தரவிட்டால் நான் என்ன செய்ய முடியும்”** என்று சூசகமாக பதிலளித்தார்.

ரேனியஸின் தம்பி எழுதிய கடிதத்தில் தாயார் தன் நினைவாகவே இருப்பதாகவும் தான் ஒரு கொடுமைக்காரன் எனவும், அவர்களைப் பொறுத்தவரையில் நான் செத்துவிட்டேன் எனவும் தனது தம்பி எழுதியிருப்பதைப் பார்த்து கண்ணீர் சிந்தினார். என் மீட்பரின் அழைப்பைப் ஏற்று அவரது நற்செய்தியைப் பரப்புவது என் கடமை என்று தனது தாயாருக்கு அன்போடு ஆறுதல் கூறி கடிதம் எழுதினார். 1814–ம் ஆண்டு ஜூன் மாதம் திருநெல்வேலிக்கு மாறுதல். சென்னையை விட்டு நெல்லைக்குச் செல்வதாக குழப்பம். குழப்பத்திலிருந்த ரேனியேஸுக்கு கிடைத்த தேவ வார்த்தை : **“நான் உனக்குச் செய்ததை இப்பொழுது அறியாய், இனிமேல் அறிவாய்”.** ஜூலை–7ம் தேதி பாளையங்கோட்டை வந்தார். **“எங்கு கிறிஸ்தவன் ஒருவன் வசிக்கிறானோ அங்கு தொழுது கொள்ள தேவாலயம் இருக்க வேண்டும்”** என்பது ரேனியேஸின் கொள்கை. அவரது ஊழிய காலம் முழுவதும் அதை நிறைவேற்றினார்.

நீண்ட நெடும் பயணங்கள் மேற்கொண்டு, நாதன் இயேசுவை நற்செய்தியாக அறிவித்து கிராமங்களில் சபையைக் கட்டுவது ரேனியஸின் வழக்கம். எல்லா கிராமத்திலும் முதலாவது பள்ளிக்கூடம் ஆரம்பித்து, ஆசிரியரை நியமித்து பள்ளிக்கூடத்திலே முதலில் ஆராதனை நடத்துவது ரேனியேஸின் முறை. எனவே தன் குறுகிய காலத்தில் 400 சபைகளையும் 200 பள்ளிக்கூடங்களையும் ரேனியேஸ் உருவாக்கினார்.

கிராமங்களில் இயேசுவை ஏற்றுக் கொண்டவர்களை ஊரை விட்டு ஒதுக்கி அங்குள்ளவர்கள் துன்புறுத்தினார்கள். எனவே ரேனியேஸ் கிராமங்களில் கிறிஸ்தவர்களாக மாறியவர்களுக்கென்று நிலத்தை வாங்கி மக்களை குடியமர்த்தி அவ்வூர்களுக்குப் பெயரும் வைத்தார். ரேனியேஸ் வைத்த பெயர்களே இன்னும் அவ்வூர்களுக்கு இருக்கிறது. (அருளூர்,

கிருபாபுரம், நல்லம்மாள்புரம், ஆசீர்வாதபுரம், கடாட்சபுரம், பாவநாசபுரம், மெஞ்ஞானபுரம், சமாதானபுரம், அனுக்கிரகபுரம், நல்லூர், சந்தோஷபுரம், அன்பின்நகரம், ஆரோக்கியபுரம், M. சாந்தபுரம், மாணிக்கபுரம், இரட்சண்யபுரம், விசுவாசபுரம், மெய்யூர், டோனாவூர், அடைக்கலாபுரம், சுவிசேஷபுரம், மகிழ்ச்சிபுரம்).

ரேனியேஸ் தன் நாட்டைவிட்டு மிஷனெரியாக புறப்பட்டு வந்தவர் தன் நாட்டிற்குச் செல்லவே இல்லை. மற்ற மிஷனெரிகள் போல கோடைகாலத்தில் கொடைக்கானல், ஊட்டி என்று செல்லாமல் **"சாத்தான் சீறுகிறான் ஆனால் அவன் தோல்வியடைவான். கர்த்தர் வாசலை திறப்பாரானால் யார் அதை மூடுவான்"** என்று ரேனியேஸ் மழையிலும், வெயிலிலும் நீண்ட தூரம் பிரயாணம் செய்து தனது 48வது வயதில் 1938–ம் ஆண்டு ஜுன் மாதம் 5ம் தேதி நேசரின் மார்பினில் இளைப்பாறும்படி நித்தியத்திற்குள் பிரவேசித்தார்.

பாளையங்கோட்டை கதீட்ரல் ஆலயத்தில் இன்னிசை எழுப்பும்படியாக அவரால் அமைக்கப்பட்ட ஆலயமணி 48 வயதில் தன்னையே இந்த மண்ணுக்குத் தந்த அப்போஸ்தலனின் மரணத்தை உலகிற்குச் சொல்லி துல்லியமாக ஒலித்தது. ரேனியேஸின் சரீரம் பாளையங்கோட்டை அடைக்கலாபுரம் ரேனியேஸ் தெருவில் நல்லடக்கம் செய்யப்பட்டிருக்கிறது.

திருநெல்வேலி திருச்சபை என்னும் மாளிகையை இயேசு நாதரின் திருக்கருணையால் அமைத்துத் தந்த **ரேனியேஸ் ஐயருக்கு,** சாலச் சிறந்த நினைவுச் சின்னமாக அமைவது இயேசுவோடு எப்பொழுதும் இணைந்து வாழும் நமது உள்ளங்கள்தான்.

## மிஷனெரி ஊழியப் பகிர்வு – தேவனுக்கே மகிமை!

**தேவ நாமம் மகிமைப்படுவதாக!** கடந்த 30.06.2013 ஞாயிறு காலை ஏரல் C.S.I பரிசுத்த லூக்கா ஆலயத்தில் நடந்த துதி ஆராதனையில் பாடல் மற்றும் ஆராதனை வேளையை **சகோ. ஆலன் எல்விஸ்** அவர்களும், ஜெப வேளையை **சகோ. ஜான்சன் ஜெபராஜ்** அவர்களும் நடத்தினார்கள். **சகோ. சாம் குணசீலன்** அவர்கள் தேவ செய்தியை அளித்ததோடு நம் ஷாலோம் ஊழியர்களைக் குறித்தும் விளக்கிக் கூறினார்கள். இந்த ஆலய போதகர் **Rev. செல்வராஜ்** அவர்களைக் கர்த்தர் ஆசீர்வதிப்பாராக.

**மீட்பர் இயேசுவுக்கே மகிமையுண்டாவதாக!** கடந்த 23.06.2013 ஞாயிறு குளத்துக் குடியிருப்பு C.S.I தூய யோவான் ஸ்நானகன் ஆலயத்தில் நடந்த ஆராதனை மற்றும் அசன விழாவில் நம் ஷாலோம் **பிஷப். V. தேவதாஸ்** அவர்கள் கலந்து கொண்டு தேவ செய்தியளித்தோடு நாம் ஷாலோம் ஊழியங்களைக் குறித்தும் விளக்கிக் கூறினார்கள். இந்த சபைக் குருவானவர் **Rev. ஆன்ட்ரூ நவராஜ்** அவர்களையும் இந்த நிகழ்ச்சியினை ஏற்பாடு செய்திருந்த **சகோ. டக்லஸ் ஆன்ட்ரூ** அவர்களையும் தேவன் தாமே ஆசீர்வதிப்பாராக. இந்த ஆராதனையில் நமது ஷாலோம் பணித்தளங்களில் இரண்டு ஆலயங்கள் கட்டும்படியாக **ரூ. 3 இலட்சங்கள்** முன்பணமாக காசோலை பிஷப் தேவதாஸ் அவர்களிடம் வழங்கப்பட்டது.

## திருநெல்வேலி வாசகர்கள் மற்றும் ஆதரவாளர்கள் கவனத்திற்கு,

**அன்பார்ந்த திருநெல்வேலி வாசகர்கள் மற்றும் ஆதரவாளர்களே!**

கர்த்தருடைய மகத்தான கிருபையால் நமது **Sharing Love Mission** - னின் முன்னேற்றப்பணிகளை திருநெல்வேலியில் உள்ள பெருமாள்புரத்தில் புதிதாக ஜுலை 2013 முதல் தொடங்கப்பட்டுள்ளது.

நம் தலைமை அலுவலகத்தில் பணிபுரிந்த ஊழியர் **சகோ. R. டேவிட்** அவர்களை இதற்குப் பொறுப்பாக நியமித்துள்ளோம். கீழக்கண்ட முகவரியில் இயங்கி வரும் திருநெல்வேலி முன்னேற்றப்பணிகளுக்காக நீங்கள் ஜெபிப்பதோடு, நேரிலோ அல்லது தொலைபேசி மூலமாகவோ தொடர்பு கொள்ளும்படி கேட்டுக் கொள்கிறோம். உங்கள் ஆலயத்தில், பகுதியில் ஜெபக்கூடுகை நடத்த விரும்பினால் கீழ்க்கண்ட முகவரியில் தொடர்பு கொள்ளவும்.

**சகோ. R. டேவிட்**

**Sharing Love Mission**

**56A/4, (Upstairs ) STC Road, C.S.I.Church South Street, Perumalpuram,**
**Tirunelveli - 627007, Cell : 9344475468**

---

### ஷாலோம் மார்த்தாண்டம் கிளை அலுவலகம்,

M.T.N. பில்டிங், (மகளிர் காவல் நிலையம் அருகில்)
வடக்குத் தெரு, மார்த்தாண்டம்.

தொடர்புக்கு: **சகோ. G. செல்வதுரை, Cell : 94876-89869,**

---

### ஷாலோம் சென்னை கிளை அலுவலகம்,

No. 102/II மெயின் ரோடு, சத்யா நகர், பாடி, சென்னை – 600 050
தொடர்புக்கு: **சகோ. R. கார்த்திகேயன்**
**Ph. : 044 : 3192246, Cell : 8144275468**

---

*ஜெபியுங்கள்!* *பங்கு பெறுங்கள்!*

## வாக்குத்தத்த ஆசீர்வாத ஜெபக் கூடுகை

நாள் : **01.08.2013 (வியாழன்)**

நேரம் : **காலை 9.30 மணி முதல் 1.00 மணி வரை**

இடம் : **அன்பு பகிர்வு இயக்கம், தலைமை அலுவலகம்**
5/168, கால்டுவெல் காலனி 3வது தெரு, தூத்துக்குடி – 628 008.

தேவ செய்தி : **Prof. C.S. கிறிஸ்டோபர்,** பாளையங்கோட்டை

# தேவனிடம் வேண்டிக் கொள்ளுங்கள்...



- ❋ குஜராத், இராஜஸ்தான், மத்தியப்பிரதேசம் ஆகிய மாநிலங்களில் வசிக்கும் ஒரு கோடிக்கும் அதிகமான பீல் ஆதிவாசி மக்கள் அனைவரும் நமது தலைமுறையில் இரட்சிக்கப்படவும், அவர்கள் வசிக்கும் 7000 கிராமங்களிலும் ஊழியர்கள் மற்றும் சபைகள் எழுப்பப்படவும் ஜெபியுங்கள்.

- ❋ பணித்தளத்தில் புதிதாக ஆரம்பிக்கப்பட்டுள்ள ஷாரோன் நினைவு மருத்துவமனைக்காகவும், அதில் பொறுப்பேற்றுள்ள **Dr. இன்பக்குமார்** அவர்களுக்காகவும் ஜெபியுங்கள். மேலும் இந்த மருத்துவமனை மூலம் அநேக ஜனங்கள் பயனடையவும், இதன் மூலம் தேவ நாமம் மகிமைப்படவும் ஜெபியுங்கள்.

- ❋ திருநெல்வேலிப் பகுதியில் புதிதாக ஆரம்பிக்கப்பட்டுள்ள ஷாலோம் முன்னேற்றப் பணி அலுவலகத்திற்காகவும், அதில் பொறுப்பேற்றுள்ள **சகோ. டேவிட்** அவர்கள குடும்பத்திற்காகவும் ஜெபியுங்கள். மேலும் இதன் மூலம் ஷாலோம் முன்னேற்றப் பணிகளில் தேவன் பெரிய காரியங்களைச் செய்ய ஜெபியுங்கள்.

- ❋ பணித்தளங்களில் தேவன் நல்ல மழையைத் தந்து வருகிறோர். அதற்காக தேவனைத் துதிப்போம். மேலும் பீல் ஜனங்கள் செய்யும் விவசாயங்களை ஆசீர்வதித்து நல்ல விளைச்சல்களைத் தரவும், அவர்களை தேவன் உயர்த்தவும் ஜெபியுங்கள்.

- ❋ தேவ கிருபையினால் தற்போது 3 மாநிலங்களிலுள்ள 30 கிராமங்களில் நடைபெற்று வரும் ஆலயக் கட்டுமானப் பணிகளை தேவன் ஆசீர்வதிக்கவும், அதற்கான தேவைகளை தேவன் சந்தித்து, ஆலயங்கள் பிரதிஷ்டை செய்யப்பட ஜெபியுங்கள்.

- ❋ குஜராத் பணித்தள அலுவலகத்திற்கு அர்ப்பணிக்கப்பட்ட ஊழியர்கள் தேவைப்படுகிறார்கள். தேவனுக்கென்று தங்களை அர்ப்பணித்த தேவப் பிள்ளைகளை தேவன் கொண்டுவரும்படியாக ஜெபியுங்கள்.

- ❋ பணித்தளங்களில் ஒவ்வொரு வெள்ளியும் நடைபெற்றுவரும் சுகமளிக்கும் ஆராதனைக்காக, அதில் அநேகர் பங்குபெற்று அற்புதங்களைப் பெற்று தேவனண்டையில் சேர ஜெபியுங்கள்.

- ❋ **பேராயர். தேவதாஸ்** மற்றும் அவர்கள் துணைவியார் **சகோதரி. வஹிதா தேவதாஸ்** அவர்களுக்காகவும் பிள்ளைகளுக்காகவும் விஷேசமாக ஜெபியுங்கள். தேவன் தாமே அவர்களுக்கு தமது ஞானத்தையும், கிருபைகளையும் தந்து ஊழியங்களை நடத்திச் செல்லவும், நல்ல சுகத்தையும், பெலத்தையும், பிரயாணங்களில் பாதுகாவலையும் தேவன் தந்து, விசேஷித்த அபிஷேகத்தின் வல்லமையால் நிரப்பவும் ஜெபியுங்கள். தேவன் பேராயர் குடும்பத்தை பீல் மக்களுக்கு மட்டுமன்றி தேசத்திற்கும் ஆசீர்வாதமாக பயன்படுத்த ஜெபியுங்கள்.

# பணித்தளங்களில் தேவ அற்புதங்கள்!

## குஜராத் மாநிலம்

**Pr. பாரத் டாமோர்** **தோலகக்ரா**

வயிறு வலியால் அவதிப்பட்ட நந்திபேனுக்காக ஜெபித்த போது தேவன் பூரண சுகம் தந்தார்.

**Pr. தெர்சிங் G. டாமோர்** **சிமலியா**

சுவாசிக்க முடியாமல் கஷ்டப்பட்ட சிக்லிபேனுக்கு தேவன் சுவாச தடைகளை மாற்றி விடுதலை தந்தார்.

வாயிலிருந்து அடிக்கடி இரத்தம் வந்ததால் அவதிப்பட்டு வந்த கமலிபேன் சகோதரிக்கு தேவன் விடுதலை கொடுத்தார்.

டைபாய்டு காய்ச்சலிலிருந்து ஷீபா பேன் மகளுக்கு பூரண விடுதலை கிடைத்தது.

**Pr. ராஜேஷ் G. மாவி** **குல்துரா**

ஒரு வாரமாய் காய்ச்சலில் இருந்து கஷ்டப்பட்டுவந்த மகேஷ்பாயின் மகனுக்கு பூரண விடுதலை கிடைத்தது.

சாத்தானின் பிடியில் கஷ்டப்பட்டு வந்த சுனித்தாபேனுக்காக ஜெபித்த போது தேவன் விடுதலையைக் கொடுத்தார்.

**Pr. கமலேஷ் டாமோர்** தொலகக்ரா

காளுபாய்க்கு வயிற்றில் காணப்பட்ட கட்டி ஜெபத்தில் மூலம் நீங்கியது. பிரியங்காபேனுக்கு காய்ச்சலிலிருந்து தேவன் சுகம் தந்தார்.

**Pr. டெடு G. ராட்டுவா** ஹர்பர்புரா

வயிறு வலியிலிருந்து ரேமலிபேனுக்கு பூரண சுகம் கிடைத்தது. மகேஷ்பாய் என்பவருக்கு தேள் கடித்துவிட்டது. ஜெபத்தின் மூலம் தேவன் சுகம் தந்தார்.

**Pr. ரங்கலா ரட்டுவா** **சனடா**

தலைவலியினால் கஷ்டப்பட்டு வந்த ராதிபேன் என்பவர் ஆலயத்திற்கு வந்து ஜெபித்த போது சுகம் கிடைத்தது. தொடர்ந்து காய்ச்சலினால் கஷ்டப்பட்டுவந்த பானுபேனுக்கு தேவன் சுகம் தந்தார். நெஞ்சு வலியினால் கஷ்டப்பட்டு வந்த பாவசிங்பாயிக்கு ஜெபித்த போது தேவன் சுகம் தந்தார்.

**Pr. பச்சு N. ரட்டுவா** **குனட்டா**

காய்ச்சலினால் கஷ்டப்பட்ட மிட்டுபாயின் பிள்ளைகளுக்காக ஜெபித்த போது தேவன் பூரண சுகம் தந்தார். அதிக வியாதிப்பட்ட ஹர்சன் பாய்க்கு ஜெபித்தபோது தேவன் பூரண சுகம் தந்தார்.

**Pr. விமல் காதிஜா** **படேலியா**

வயிறு வலியினால் கஷ்டப்பட்டு வந்த சுனில் என்பவருக்காக ஜெபித்த போது தேவன் பூரண சுகம் தந்தார்.

**Pr. வெல்ஜி K.சார்போடா** **துங்கிரிபடா**

வேலை செய்ய முடியாமல் கைகளின் பெலன் இழந்த தினேஷ்பாய் என்பவருக்கு ஜெபித்த போது தேவன் சுகம் கொடுத்தார்.

நாக்பேனுக்கு வியாதியிலிருந்து தேவன் பூரண சுகம் தந்தார்.

**Pr. தோல்சிங் கராசியா** **கலகேத்**

ஜேத்மல்பாய் என்ற சகோதரருக்கு டைபாய்டு காய்ச்சலில் இருந்து தேவன் சுகம் தந்தார். ஆஷ்பாய்க்கு காய்ச்சலில் இருந்து விடுதலை கிடைத்தது.

**Pr. சோகன்லால் R. நினாமா** **சரக்கனி**

மஞ்சல் காமாலை நோயினால் பாதிக்கபட்ட சோட்பா பேனுக்காக ஜெபித்த போது தேவன் பூரண சுகத்தைக் கொடுத்தார்.

உதிரப்போக்கினால் வேதனைப்பட்ட ஷெக்கினா பேனுக்காக ஜெபித்த போது அற்புத சுகம் கிடைத்தது.

**Pr. சங்கர்லால் M. டோடியார்** **பாலசிந்தூர்**

ரமிலாபேனை தேள் கடித்துவிட்டது. ஜெபித்தபோது தேவன் பூரண சுகம் தந்தார்.

காருபாயை பாம்பு கடித்துவிட்டது. ஜெபித்த போது தேவன் உயிரை பாதுகாத்தார்.

புத்லிபேனுக்கு வயிறு வலியில் இருந்து தேவன் பூரண சுகம் தந்தார்.

**Pr. சவுல் டோடியார்** **கலியாபீத்**

அசுத்த ஆவியால் வேதனைபட்ட தாராபேனுக்காக ஜெபித்த போது தேவன் விடுதலை தந்தார்.

**Pr. சுரேஷ் பரியா** **பாவ்காகுடா**

1 வருடமாக கைகால் வேதனையினால் அவதிப்பட்டு மந்திரவாதிகளிடம் சென்றும் விடுதலை கிடைக்காமல் கடைசியில் நம் ஆலயம் வந்து ஜெபித்த போது சும்பாபேன் என்பவருக்கு தேவன் பூரண சுகம் தந்தார்.

தலை வலியினால் 8 மாதங்களாக அவதிப்பட்டு வந்த கபிபேன் என்பவருக்காக ஜெபித்த போது தேவன் பூரண சுகம் தந்தார்.

**Pr. நகதியா சங்கடா** **தேவிகாட்**

வலிபேன் என்பவர் சரீர எரிச்சலுக்கு மருந்துகள் சாப்பிட்டும் குணமாகாமல் இறுதியில் ஜெபித்த போது தேவன் பூரண சுகம் தந்தார்.

**Pr. நவ்லேஸ் K. தாவர்** **பிபிலியா**

சுரேஷ்பாயின் மகனுக்கு காய்ச்சலில் இருந்து பூரண சுகம் கிடைத்தது.

**Pr. நவால்சிங் D. மாவி** **ரிங்கோல்**

ரமிஷ்பேன் என்பவர் வியாதிப்பட்டு ஆயிரக்கணக்கான பணம் செலவு செய்தும் பயனில்லாமல் கடைசியில் ஜெபிக்கவே பூரண சுகம் கிடைத்தது.

**Pr. நாத்துசிங் R. பாபோர்** **களிபுரா**

காளிபாய்க்கு சரீர வேதனையிலிருந்து தேவன் விடுதலை தந்தார்.

**Pr. நான்சிங் சௌகான்** **டெல்வானி**

பிசாசுபிடியில் பாதிக்கப்பட்ட முக்தார்பாய் குடும்பத்திற்கு தேவன் பூரண சுகம் தந்தார்.

**Pr. மங்கிலால் D. அமளியார்** **கேதர்தா**

அதிக வியாதியில் அவதிப்பட்ட ரம்யாபேன் மந்திரவாதிகளிடம் சென்று குணமாகாமல் இயேசுவை நோக்கி ஜெபித்தவுடன் பூரண சுகம் கிடைத்தது.

**Pr. மன்சிங் G. டாமோர்** **மண்டி**

ரம்துபேன் 10 நாட்களாக காய்ச்சலினால் வேதனைப்பட்டு வந்தார். ஜெபித்த போது பூரண சுகம் கிடைத்தது.

சாகேஷ்புரியா குடும்பத்தில் இருந்த பிசாசு தொந்தரவுகள் ஜெபத்தின் மூலம் நீங்கியது.

**Pr. மால்சிங் மெய்டா** **பன்டகபார்**

மங்குபாயின் 35 வயது மகளுக்காக ஜெபிக்கவே பிரச்சனைகள் மாறியது. தேவன் குழந்தைப்பாக்கியத்தையும் தந்துள்ளார்,

**Pr. மதியாஸ் S. கர்வால்** **ரிபல்கோட்டா**

ராம்சந்த்பாயின் பிறந்த குழந்தைக்கு காய்ச்சல் ஏற்பட்டு அவதிப்பட்ட சூழ்நிலையில் ஜெபித்த போது தேவன் பூரண சுகம் தந்தார்.

---


"சோர்ந்துபோகிறவனுக்கு அவர் பெலன் கொடுத்து,
சத்துவமில்லாதவனுக்குச் சத்துவத்தைப் பெருகப் பண்ணுகிறார்".
ஏசாயா 40 : 29

# கமலா ஞான சிரோமணி நினைவு மேல்நிலைப் பள்ளி, S. கைலாசபுரம்.

S. கைலாசபுரம் என்பது தூத்துக்குடி – மணியாச்சி இரயில் பாதையில் ஒரு புகைவண்டி நிலையமாக அமைந்துள்ள சிறிய கிராமமாகும். இக்கிராமத்தின் கிரீடமாக அமைந்தது அங்குள்ள மேல் நிலைப்பள்ளியாகும். **தாவீது உபதேசியாரின்** அரிய முயற்சியால் கைலாசபுரத்தில் ஆரம்பப்பள்ளி ஒன்று துவங்கப்பட்டது. 1952–ல் **E.A. வேதமுத்து நாடார்** அவர்களின் முயற்சியால் நடுநிலைப்பள்ளியாக அப்பள்ளி உயர்வு பெற்றது.

அதற்கு பின்பு கைலாசபுரம் மக்களால் அன்போடு **மலைக்காரர் ஐயா** என்று அழைக்கப்படும் **திரு. ஞானசிரோமணி** அவர்கள் தன் அருங்கொடையாலும் பிரயாசத்தாலும் அன்புத் துணைவியார் **கமலா ஞானசிரோமணி அம்மையாரின்** நினைவாக 1973ல் **T.D.T.A. கமலா ஞானசிரோமணி நினைவு உயர்நிலைப்பள்ளியாக** உயர்த்த உதவினார். **அருள்திரு எபநேசர் சாமுவேல்** அவர்கள் தலைமை ஆசிரியராகவும் **திரு. M. ஜெயராஜ் வில்லியம்ஸ்** அவர்கள் தாளாளராகவும் பொறுப்பேற்று பள்ளியை முன்னேற்றப்பாதையில் நடத்திச் சென்றனர். 1978 ஆம் ஆண்டு தலைமை **ஆசிரியர் திரு. ராஜா சவுந்திரபாண்டியன்** அவர்கள் காலத்தில் மேல்நிலைப்பள்ளியாக உயர்வு பெற்றது. இதன் சுற்றுவட்டாரத்தில் 25 கிராமத்தில் உள்ள பிள்ளைகள் பயன்பெறும் வண்ணமாக சிறப்பாக கல்விப்பணி தொடர்ந்தது.

இப்பள்ளியில் தலைமை ஆசிரியர்களாக, தாளாளர்களாக பணியாற்றியவர்களின் இப்பள்ளியின் முன்னேற்றத்திற்கு பங்கு வெகு அதிகம். **திரு. ராஜா சவுந்திர பாண்டியன்** அவர்கள் தலைமை ஆசிரியராக மட்டும் இல்லை. மருத்துவ வசதி இல்லாத இக்கிராமத்தில் ஹோமியோபதி மருத்துவராகவும் பணிபுரிந்தார். **திரு. மார்ட்டின் ஜெசுரன்** தலைமை ஆசிரியராக இருக்கும் பொழுது பள்ளி அலுவலகக் கட்டிடத்தோடு இரண்டு வகுப்பறைகள் கட்டப்பட்டன. அதைத் தொடர்ந்து **திரு. J. அற்புதராஜ் மர்காஷிஸ்** அவர்கள் தலைமை ஆசிரியராக இருந்த போது மூன்று வகுப்பறைகளைக் கொண்ட கட்டிடமும் கட்டப்பட்டது. மேலும் கைலாசப்புரத்தில்



உள்ளவர்கள் அநேகர் மலேசியா, சிங்கப்பூரில் உள்ளனர். அவர்களிடம் நேரில் சென்று தலைமை ஆசிரியர் அவர்கள் நன்கொடை பெற்று 3 வகுப்பறைகள் கட்டப்பட்டன. அதைத் தொடர்ந்து பள்ளி நிர்வாக கட்டிடத்தின் மேல் 3 வகுப்பறைகளும் கட்டப்பட்டன. கீழ்புரத்தில் இருந்த கட்டடத்தை புதுப்பித்து ஒரு ஆய்வுக்கூடம் கட்டப்பட்டது. பள்ளிக்கு சுமார் 400 பிள்ளைகள் இரயிலில் வருவார்கள்.

1992 ஆம் ஆண்டு அகல ரெயில் பாதை அமைப்பதற்காக ரெயில் நிறுத்தப்பட்டது. அப்போது தலைமை ஆசிரியர் **திரு. J. அற்புதராஜ் மர்காஷிஸ்** அவர்களுடன் தமிழ் ஆசிரியர் **I. பெரியசாமி** அவர்கள் சென்னை சென்று அப்போதைய போக்குவரத்து அமைச்சரை சந்தித்து பஸ் வசதி செய்து தர கேட்டுக்கொண்டதின்பேரில் திருநெல்வேலியில் இருந்து மணியாச்சி, கைலாசப்புரம் வழியாக புதியம்புத்தூருக்கு அரசு பஸ் ஒன்று விடப்பட்டது. 12ம் வகுப்பு மாணவர்கள் அந்த கல்வி ஆண்டில் 100 சதவீதம் வெற்றி பெற்று பள்ளிக்கு பெருமை சேர்த்தனர். **திரு. I.V. சுகிர்த ராஜ்** அவர்கள் தலைமை ஆசிரியராயிருக்கும்போது கைலாசபுரத்தை சேர்ந்த மலேசியா வாழ் திருமகனார் **K.J.S. தேவராஜ்** அவர்களின் பேருதவியால் 25 ஆண்டு நிறைவு வெள்ளிவிழா நினைவு மண்டபம் கட்டப்பட்டது.

தாளாளர்கள் **திரு. ஜெயராஜ் வில்லியம்ஸ், திரு. G. ரெஜினால்ட், திரு. ஜெயசிங், திரு. SVP. S. ராஜவேல்** ஆகியோரின் சிறந்த வழிகாட்டுதலாலும், நன்கொடையாளர்கள் **திரு. G. ஜியார்ஜ் ஞானசிரோமணி, திரு. G.T. சவுந்திரபாண்டியன், திரு. தேவராஜ்** (மலேசியா), **திரு. தாமஸ்** (மலேசியா) **திரு. M. வேலாயுதம்** (தூத்துக்குடி) போன்ற நல்லெண்ணம் கொண்டவர்கள் பலருடைய ஆதரவுடனும், தலைமை ஆசிரியர்கள், ஆசிரியர்கள், பழைய மாணவர்கள் ஆகியோரின் தியாக மிகு உழைப்பாலும் இப்பள்ளி ஆல் போல் வளர்ந்து கிளைகள் தோன்றி உலகெங்கிலும் புகழ்பரப்பி சிறந்த ஒரு கல்வி கூடமாக அமைந்துள்ளது. இங்கு கல்வி கற்றவர்கள் அநேகர் டாக்டர்களாக, பொறியல் வல்லுனர்களாக, கல்வித்துறைபோன்று அநேக அரசு துறையிலும் உயர் பதவி வகித்து வருகின்றனர். உயர்ந்த தொழில் அதிபர்களாக, கோடீஸ்வரர்களாக இந்தியாவிலும், வெளிநாடுகளிலும் இருந்து இப்பள்ளிக்கு பெருமை சேர்த்து வருகின்றனர். **மேன்மேலும் இப்பள்ளி சிறக்க, வளம் பெற இனிதே வாழ்த்துகிறோம். தேவனுக்கே மகிமை!**

வெளிநாட்டிலிருந்து தமிழகம் வந்த மிஷனெரிகள் நமது பகுதிகளில் பள்ளிக்கூடங்கள், மருத்துவமனைகள் போன்றவற்றை நிறுவி, நமது சமுதாயத்தை முன்னேற்றியது போல இன்று ஷாலோம் ஊழியங்களின் மூலமாக குஜராத், இராஜஸ்தான் மற்றும் மத்தியப்பிரதேசம் ஆகிய மூன்று மாநிலங்களிலும் பள்ளிக் கூடங்கள், மாணவர்களுக்கான விடுதிகள் மற்றும் மருத்துவமனைகளை நிறுவி பீல் ஆதிவாசி மக்கள் சமுதாயத்தை உயர்த்த பாடுபட்டு வருகிறோம். இன்னும் ஆயிரக்கணக்கான கிராமங்களில் பள்ளிக்கூடங்களோ மருத்துவமனைகளோ கிடையாது. எனவே தேவ பிள்ளைகளாகிய நீங்கள் ஜெபித்து, உதவுவீர்கள் என்றால் முழு பீல் மக்களையும் சமுதாயத்தில் முன்னேற்றி அவர்களை கிறிஸ்துவண்டை வழி நடத்த ஏதுவாயிருக்கும். **ஜெபிப்போம்! கர்த்தர் பெரிய காரியங்களைச் செய்வார்!**



# ஷாலோம் - வேத வினாப் போட்டி 5

**பதில் எழுதுக :**

1. சங்கீதக்காரனின் சிறுமையில் எது அவனுக்கு ஆறுதல்?
2. கர்த்தர் தெரிந்து கொண்ட முத்திரை மோதிரம் யார்?
3. யோசுவாவின் அழுக்கு வஸ்திரம் எதைக் குறிக்கிறது?
4. சகரியா எந்த ஆசாரிய வகுப்பைச் சேர்ந்தவன்?
5. ஆசரிப்புக் கூடாரத்தை விட்டுப் பிரியாதிருந்த பணிவிடைக்காரன் யார்?
6. ஏழு வயதில் ராஜாவானவன் யார்?
7. மனோசேயின் தாயார் பெயர் என்ன?
8. யார் வாயாடியும் ஒன்றுமறியாத நிர்மூடமுமாயிருக்கிறாள்?
9. காட்டத்திப் பழங்களை பொறுக்கிறவ–னாயிருந்த தீர்க்கத்தரிசி யார்?
10. யார் சேனைகளுடைய கர்த்தரின் தூதன்?

**வேதவினாப் போட்டியில் பங்கு பெறும் வாசகர்களுக்கான நிபந்தனைகள் :**

1. விடைகள் யாவும் தகுந்த வேத ஆதாரத்துடன் இருக்க வேண்டும்.
2. பதில்களை மட்டும் எழுதினால் போதும்.
3. பரிசு பெறுபவர் ஒன்றுக்கு மேற்பட்டவராக இருப்பின் குலுக்கல் முறையில் தேர்வு செய்யப்படுவர்.
4. விடைகளை எழுதும் போது தவறாமல் உங்கள் விலாசம், போன் நம்பர் போன்றவற்றையும் சேர்த்து எழுதவும்.
5. பதில்கள் வந்து சேர வேண்டிய கடைசி நாள் : **15.08.2013**

**கடந்த மாத போட்டிக்கான சரியான விடைகள் :**

1. கர்த்தர் இடம் உண்டாக்கினார். (ஆதி. 26 : 22)
2. தாண் (ஆதி. 49 :17)
3. ஓரேப், மேரிபா (யாத். 17:6, சங். 106:32)
4. மோவாபியரின் பெண்களுடன் சேர்ந்தார்கள். (எண் 25:18)
5. ஏகூத் (நியாயா. 3:15)
6. ஆயுசு நாட்கள் (யோபு 9:25,26)
7. உமது இரட்சிப்பை விரும்புகிறவர்கள். (சங். 40:16)
8. கலப்பையின்மேல் கை வைத்து பின்னிட்டுப் பார்க்கிறவன் (லூக். 9:62)
9. மாற்கு (2 தீமோ. 4:11)
10. 2 பேதுரு 2:14 (வசனம் முழுவதும்)

**கடந்த மாத வேத வினாப் போட்டி 4–ல் சரியான விடையினை சரியான நேரத்திற்குள் எழுதி அனுப்பியவர்களில் குலுக்கல் முறையில் தேர்வு செய்யப்பட்டு பரிசு பெற்றவர்கள்.**

**1. Sis. சொர்ணமணி தாமஸ்,** பரமன்குறிச்சி. **2. Sis. ஜாஸி ஜூலியா,** சென்னை.

**3. Bro. வில்சன் தர்மராஜ்,** போடிநாயக்கனூர்

பதில்களை அனுப்ப வேண்டிய முகவரி


**SHARING LOVE MISSION**
New No. 5A/323, Old.No. 5/168, Caldwell Colony, 3rd Street,
**Tuticorin - 628 008.** Tamil Nadu.
Phone: 0461 - 2375468, Cell : 9345675468

# காணிக்கை அனுப்பும் வழிகள்

- தூத்துக்குடியில் உள்ள ஷாலோம் ஆதரவாளர்கள் நேரடியாக வர முடிந்தவர்கள் உங்கள் காணிக்கையை தூத்துக்குடி தலைமை அலுவலகத்திற்கு வந்து கொடுத்து ஜெபித்து ஆசீர்வாதத்தை பெற்றுக் கொள்ளுங்கள். உங்கள் பகுதியில் ஷாலோம் பிரதிநிதிகள் அல்லது ஷாலோம் ஊழியர்கள் இருந்தால் அவர்களிடம் காணிக்கையைக் கொடுத்து இரசீதை மறவாமல் பெற்றுக் கொள்ளுங்கள்.
- காணிக்கைகளை M.O. மூலம் தூத்துக்குடி தலைமை அலுவலகத்திற்கு அனுப்பலாம். அனுப்பும் போது உங்களின் தெளிவான முகவரியை கிழித்துக் கொடுக்கும் பகுதியில் எழுதும்படி தயவாய் கேட்டுக்கொள்கிறோம்.
- D.D./Cheque மூலமாக தூத்துக்குடி தலைமை அலுவலகத்திற்கு உங்கள் காணிக்கையை அனுப்பலாம்.
- உங்களது வங்கிக் கணக்கில், Net Transfer வசதி இருந்தால் Net Transfer மூலமாகவும் காணிக்கைகளை அனுப்பலாம்.
- **www.shalommission.in** இணைய தளத்தின் மூலமாகவும் காணிக்கைகளை அனுப்பலாம்.

---

***நீங்கள் வசிக்கும் ஊர்களில் கீழ்க் கண்ட வங்கிகள் இருந்தால் அங்கேயே எங்கள் கணக்கில் காணிக்கையைச் செலுத்தலாம்.***

வங்கிக் கணக்கின் பெயர் : **Sharing Love Mission**

Branch : Tuticorin, கிளை : தூத்துக்குடி

---

**Tamilnad Mercantile Bank**
**A/c. No. : 106100710400009 (I F S Code : TMBL0000106)**

---

**AXIS BANK**

**A/c. No. : 105010100094373**
**(IFS Code : UTIB0000105)**

---

**ICICI Bank**

**A/C. No. 613901112799**
**(IFS Code : ICIC0006139)**

---

*குழந்தை ஆதரவுத் தொகை மற்றும் சமுதாயப்பணி காணிக்கைகளை அனுப்ப,*

| | | |
|---|---|---|
| வங்கிக் கணக்கு | : | **SHALOM CHARITY MISSION** |
| **Axis** வங்கிக் கணக்கு எண் | : | **105010100096779 - Tuticorin Branch** |
| **TMB** வங்கிக் கணக்கு எண் | : | **174100710400061 - Tuticorin Branch** |

---

நீங்கள் ஷாலோம் ஊழியங்களுக்கு வங்கிக் கணக்குகளில் காணிக்கை செலுத்தியபின், உடனடியாக இந்தத் தகவலை எங்களுக்குத் தெரியப்படுத்த அன்பாய்க் கேட்கிறோம். அப்படி தெரியப்படுத்தாத பட்சத்தில் எங்களுக்கு யார் காணிக்கை அனுப்பியது என்று தெரியாமல் போய்விட வாய்ப்பு உள்ளது. ஆகவே ஆதரவாளர்கள் உடனடியாக எங்களோடு தொடர்பு கொண்டு தாங்கள் காணிக்கை செலுத்திய விபரத்தினை எங்களுக்குத் தெரிவியுங்கள்.

வட இந்திய மாநிலங்களில் கடந்த ஜூன் மாதத்தில் ஏற்பட்ட பெரும் வெள்ளப்பெருக்கு மற்றும் நிலச்சரிவு ஏற்பட்டது. இதில் ஆயிரக்கணக்கில் மக்கள் சிக்கினர். இமய மலைப் பிரதேசமான உத்திரகாண்டில் ஏற்பட்ட திடீர் ஆற்று வெள்ளத்தால் நூற்றுக்கணக்கானோர் ஒதுக்குப்புறமான மலைப் பகுதிகளில் சிக்கினர்.

புலிகளின் சரணாலயமாக அறிவிக்கப்பட்டிருக்கும் சத்தியமங்கலம் வனப்பகுதியில் கல் உடைக்கும் குவாரி வேலைகளுக்கு தடைவிதித்து தேசிய பசுமைத் தீர்ப்பாயத்தின் சென்னை அமர்வு உத்தரவிட்டுள்ளது. இந்த கல் உடைக்கும் குவாரிகளினால் வனவிலங்குகளுக்கும் சுற்றுச் சூழலுக்கும் மோசமான ஆபத்து ஏற்படுகிறது. மேய்ச்சல் நிலங்களும் பாழ்படுகின்றன. வீடுகளிலும் விரிசல்கள் ஏற்படுவதாக சுற்றுச்சூழல் ஆர்வலர்கள் கண்டறிந்திருக்கிறார்கள்.

2001ஆம் ஆண்டுக்கும் 2010ஆம் ஆண்டுக்கும் இடைப்பட்ட பத்தாண்டு காலகட்டத்தில் உலகம் முன்னெப்போதுமில்லாத தீவிர காலநிலை மாறுதல்களைப் பதிவு செய்துள்ளது என உலக வானிலை ஆய்வுக் கழகம் கூறுகிறது. முந்தைய காலங்களில் இல்லாத அளவுக்கு அதிகமான வெப்பமும், குளிரும் பல்வேறு நாடுகளில் பதிவாகியிருப்பதாக அக்கழகத்தின் புதிய அறிக்கை ஒன்று கூறுகிறது. நூறு ஆண்டுகளுக்கு முந்தைய அளவுகளோடு ஒப்பிடுகையில் தற்போது இருமடங்கு வேகத்தில் கடல் மட்டம் அதிகரித்து வருவதாக தெரிகிறது.

அமெரிக்காவால் பலகாலமாக ஹெச்.ஐ.வி. தொற்று இருந்தவர்கள் இரண்டு பேருக்கு எலும்பு மஜ்ஜை மாற்று சிகிச்சை அளிக்கப்பட்டதை அடுத்து, அவர்கள் உடலில் இருந்து, ஹெச்.ஐ.வி. கிருமி நீங்கிவிட்டதாக மருத்துவர்கள கூறுகின்றனர். சர்வதேச எய்ட்ஸ் சங்க மாநாட்டில் இந்த முடிவுகள் வெளியிடப்பட்டுள்ளன.

நன்றி : www.bbc.co.uk

## எங்களுடன் தொடர்பு கொள்ள


தலைமை அலுவலகம்

**SHARING LOVE MISSION**
New No. 5A/323, Old.No. 5/168,
Caldwell Colony, 3rd Street,
**Tuticorin - 628 008.** Tamil Nadu.

Phone: 0461 - 2375468
Cell : 9345675468

பணித்தள அலுவலகம்

**Rt. Rev. Dr. V. DEVADASS**
Founder & General Secretary
Shalom, Christian Kamdar Society,
Dahod - 389 151, Gujarat

Ph. : 02673 - 325468
Cell : 09377445468

**email : info@shalommission.in website : www.shalommission.in**

## ஷாலோம் கிராம ஆலயம்



# மான்ட்லி மத்தியப்பிரதேசம்

மத்தியப்பிரதேசம் மாநிலத்தில் மேஹ்நகர் தாலுகாவில் மிகவும் உள்ளடங்கியதுதான் மான்ட்லி கிராமம். இங்கு பெரும்பாலான குடும்பங்கள் சாராயத்தினைக் காய்ச்சி, குடித்து, வெறித்து சண்டையிட்டு வாழ்ந்து வருகிறார்கள். மேலும் இந்த பகுதியில் அநேகர் திருடுவதையும், கொள்ளையடிப்பதையும் தொழிலாகக் கொண்டவர்கள். அதிகமான மந்திரவாதிகளும், அசுத்த ஆவிகளினால் பிடிக்கப்பட்டு அந்தகாரத்தில் வாழ்பவர்களும் அநேகர். போக்குவரத்து, மின்சாரம், கல்வி போன்ற அடிப்படை வசதிகள் கிடைக்கப் பெறாத ஒரு கிராமமாகும்.

இந்த சூழ்நிலையில் வசித்து வந்த சகோ. ஹவ்ஜி பாய் புரியா வயிற்றில் இருந்த கட்டியினால் மிகவும் வேதனைப்பட்டு வந்தார். இந்தக் கட்டி நீங்க அவர் மந்திரவாதிகளை அணுகி, ஆடு, கோழி ஆகியவற்றை பலியிட்டார். அநேக மருத்துவர்களை அணுகி அதிகளவில் பணம் செலவு செய்தார். ஆனாலும் சுகம் கிடைக்கவில்லை. இந்த சூழ்நிலையில் அவரது கிராமத்திலிருந்து 10 கி.மீ. தொலைவில் உள்ள அமளியமாள் கிராமத்தில் உள்ள ஷாலோம் சபையைக் குறித்து ஒரு விசுவாசி கூறி அவர்களை குடும்பமாக அங்கு அழைத்துச் சென்றார்.

அங்கு அந்த சபை போதகர் சகோ. மத்தூர் புரியா, இவருடைய குடும்பத்திற்காக ஜெபித்த போது, தேவன் சரீரத்திருந்த கட்டியை எடுத்துப் போட்டு, அற்புத விடுதலையைக் கொடுத்தார். இந்த அற்புதத்தின் மூலம் இயேசு கிறிஸ்துவை ஏற்றுக் கொண்டு, தன்னுடைய சொந்த வீட்டில் ஜெபக்கூட்டம் ஆரம்பித்து நடத்தி வந்தார். இரண்டு ஆண்டுகளுக்குப்பின் சகோ. ஹவ்ஜி பாய் மரித்ததினால் சகோ. நாத்துபாய் புரியா அவர்களின் வீட்டில் ஆராதனை நடைபெற ஆரம்பித்தது. இந்த ஊழியங்களை சகோ. மான்சிங் டாமோர் அவர்கள் ஊழியங்களைப் பொறுப்பாக செய்து வருகிறார். விசுவாசிகள் பெருகவே, தேவனை ஆராதிக்க ஆலயம் அவசியம் என உணர்ந்து, சகோ. நாத்துபாய் புரியா தன்னுடைய நிலத்தை தேவனுடைய ஆலயம் கட்ட காணிக்கையாகக் கொடுக்க, தேவ நாமம் மகிமைக்காக 40 x 20 என்றஅளவில் அழகான தேவ ஆலயம் கட்டப்பட்டு, 27.04.2013 அன்று சகோ. விஜய்சிங் அவர்கள் பணித்தளங்களை பார்வையிட்டபோது, அவர்களால் பிரதிஷ்டை செய்யப்பட்டது. தற்போது 35க்கும் அதிகமான குடும்பத்தார் தேவனை ஏற்றுக் கொண்டு ஞாயிறு தோறும் ஆராதனை செய்து வருகின்றனர். தேவனுக்கே மகிமை உண்டாவதாக!

இந்த கிராம ஆலயம் **இயேசு விடுவிக்கிறார்,** நாலுமாவடி, ஊழியத்தின் சார்பில் வழங்கப்பட்ட நிதியிலிருந்து கட்டப்பட்டதாகும்.

**ரூ. 2 இலட்சம் மதிப்பில் அல்லது ரூ. 1 இலட்சம் மதிப்பில் இந்த 2013ம் ஆண்டிற்குள் 100 ஆலயங்கள் கட்டிக் கொடுக்க முன் வருவோர் தேவை! ஜெபியுங்கள்!!**

# பீல் ஆதிவாசி மாணவர் பராமரிப்புத் திட்டம்

## BLESS A CHILD - PROJECT



மாணவனின் பெயர் : **யோசுவா வசுனியா**

தந்தையின் பெயர் : ரமேஷ் வசுனியா

தாயார் பெயர் : சவித்தா வசுனியா

பிறந்த நாள் : 06.08.2005

படிக்கும் வகுப்பு : 2nd Std.

சொந்த ஊர் : சொக்வாடா

மாவட்டம் & மாநிலம் : ஜாபுவா, மத்தியப்பிரதேசம்

### மாணவனின் பெற்றோரைப் பற்றிய சில வரிகள்:–

இவனுடைய தந்தை சகோ. ரமேஷ் வாசுனியா. இயேசுவை அறியாத பீல் ஆதிவாசி குடும்பத்தைச் சேர்ந்தவர். இவர் மிகவும் அந்தகாரத்தில் வாழ்ந்து வந்தாலும், கிறிஸ்தவ பள்ளிக் கூடத்தில் படித்ததன் மூலம் இயேசு கிறிஸ்துதான் உண்மையான தெய்வம் என்று அறிந்து அவரை சொந்த இரட்சகராக ஏற்றுக் கொண்டார். தேவன் இவரை அபிஷேகித்து ஊழியத்திற்கு அழைத்தார். அழைப்பினை ஏற்று தனது சொந்த கிராமத்தில், சொந்த ஜனங்களின் மத்தியில் ஊழியம் செய்து வருகிறார்.

**மாணவனைக் குறித்து :–** யோசுவா நன்கு படிக்கும் மாணவன்.

**ஜெபியுங்கள் :–** படிப்பிற்காக, சுகத்திற்காக, பெற்றோர் செய்யும் ஊழியத்திற்காக ஜெபியுங்கள்.

**மாணவனைத் தாங்குபவர் :–** ***Mr. Sivakumar - Chennai.***

### ஜெபித்துத் தாங்க முன்வாருங்கள்...

பிரியமானவர்களே! நீங்களும் ஜெபித்து மாதம் ரூ. 600/– கொடுத்து பீல் ஆதிவாசி மாணவரைத் தாங்க முன் வரலாம். நாம் பராமரித்து வரும் 947 மாணவர்களில் இன்னும் **163 மாணவர்களுக்கு ஆதரவாளர்கள் தேவைப்படுகிறார்கள்.**

***Shalom Charity Mission*** என்ற பெயரில் இதற்கான காணிக்கைகளை D.D. அல்லது Cheque மூலமாக அனுப்ப அன்பாய் கேட்கிறோம். உங்கள் நண்பர்கள் மற்றும் உறவினர்களையும் தாங்கும்படியாக தயவாய் அறிமுகப்படுத்திவையுங்கள்.